பக்கங்கள் : பன்னிரண்டு

மாநகர சபை,

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 18 புதன்கிழமை (03.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 281

# மல்லாவி நகரம் முழுமையாக நேற்றுப் பிற்பகல் படைகள் வசம்

## முக்கிய வெற்றி என்கிறது அரசாங்கம்

கொழும்பு,செப்ரெம்பர் 03

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மல்லாவி நகரம், நேற்றுப் பிற்பகலில் முழுமையாகப் படையினர் வசம் வந்ததாக பாதுகாப்பு அமைச்சு மாலையில் உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

துணுக்காய் பகுதியை கைப்பற்றிய பின்னர் மல்லாவியை முழுமையாக கைப்பற்றியதை முக்கிய வெற்றியாகக் கருதுவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மல்லாவி நகரத்தில் சுமார் முக்கால்ப் பகுதியை படையினர் திங்கட்கிழமை பிற்பகலில் கைப்பற்றி இருந்ததாக இராணுவத் தலைமையகம் நேற்று அறிவித்திருந்தது தெரிந்ததே.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் வரை விடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன மாணவி சடலமாக நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், செப்.03

கடந்த வெள்ளிக்கிழமை மாலை காணாமற்போன மாணவி ஒருவர் சடலமாக நேற்று பிற்பகல் யாக்கரை வயல் பகுதியில் மீட்கப்பட்டுள்ளார்.

துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த பாஸ்கரன் கௌசல்யா (வயது-15) என்ற மாணவியே மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை வீட்டில் இருந்து வெளியில் சென்ற இந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாவி அரச படைகளிடம் வீழ்ந்தமை இரண்டு தரப்புகளுக்கும் கடும் சோதனையாகலாம்

### போர் உக்கிரமடைவதற்கான எதிர்வுகூறல் என்கிறார் அத்தாஸ்

கொழும்பு,செப்.03

மல்லாவியை அரச படையினர் கைப்பற்றி இருப்பது இனி வரப்போகும் நாள்களில், வாரங்களில் போர் உக்கிரமடையும் என்பதனையே எதிர்வுகூறுவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரபல பாதுகாப்புத்துறை விமர்சகர் இக்பால் அத்தாஸ்.

விடுதலைப் புலிகளின் பிரதேசங்களில் இராணுவத்தினர் பல திக்குகளிலும் ஏற்கனவே முன்னேறி வந்தனர். இப்போது மல்லாவியையும் கைப்பற்றி உள்ளனர். இனி வரும் வாரங்களில் போர் புதிய கட்டம் ஒன்றை அடையப்போகிறது என்பதனை இது முற்கூட்டியே கூறுவதாக அமைகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை விற்பனை முகவர் வவுனியாவில் கடத்தப்பட்டார்

வவுனியா, செப்.03

வவுனியா பஸ்நிலைய கட்டட தொகுதியில் உள்ள பத்திரிகை விற்பனை நிலையம் ஒன்றின் முகவரான இளைஞன் ஒருவர் கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸ் நிலையத்தில் அவரது உறவினர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் பாதுகாப்பை ஐ.நாவே உறுதி செய்ய வேண்டும்

### மாவை சேனாதிராசா கோரிக்கை

கொழும்பு, செப்.3

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்க ளின் பாதுகாப்பை ஐ.நா.உறுதிசெய்ய வேண்டும்.

அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்துப்பொருள்களை தமது

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடாவில் நேற்றுக் கடும் சமர் படையினரின் முன்நகர்வு முறியடிக்கப்பட்டது

வவுனியா, செப்.03

கிளிநொச்சி மாவட்டத்தில் நாச்சிக்குடாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு ஆரம்பமான கடும் சமர் நேற்றுப் பிற்பகல் வரை தொடர்ந்தது.

படையினர் தமது பகுதியை நோக்கி முன்னேற எடுத்த முயற்சியை 12 மணிநேர கடும் சமரின் பின் முறியடித்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

நாச்சிக்குடாவை நோக்கி நேற்று முன்தினம் மாலை படையினர் முன்நகர்வு முயற்சி மேற்கொண்டபோது மோதல் வெடித்தது என்றும் - நேற்றுக் காலைவரை மோதல் தொடர்ந்தது என்று படைத்தரப்பு அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து....

நாச்சிக்குடாவை வல்வளைக்கும் நோக்கில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சிறிலங்காப் படையினர் பெருமெடுப்பில் பாரிய முன்நகர்வினை மேற்கொண்டனர்.

முன்நகர்வின் போது சிறிலங்காப்படையினர் கனரக போர்க்கலங்களுடன் மிகச் செறிவாக பல்குழல் வெடிகணை, ஆட்லெறி ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் பயிற்சி பாடசாலையின் தமிழ் பயிலுநர் சந்தேகத்தில் கைது

கொழும்பு, செப்.03

களுத்துறை பொலிஸ் பயிற்சி பாடசாலையின் பயிலுநரான மலையக இளைஞர் ஒருவர் கொழும்பு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் சந்தேகத்தின்பேரில் கடந்த 26 ஆம் திகதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொத்துவிலில் அதிரடிப்படையினர் மீது புலிகள் தாக்குதல் ; இருவர் பலியாகினர்

அம்பாறை, செப். 03

அம்பாறை, பொத்துவில் - பாணம வீதியில் நேற்று மதியம் 12.30 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மற்றும் ஊர்காவல்படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். அதில் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவரும் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரும் கொல்லப்பட்டனர் என்று படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

அந்தத் தாக்குதலில்

(12ஆம் பக்கம் பார்க்க)

### பப்புவா நியூகினியா தீவு ஊடாக

## போலி விசாவில் ஆஸி. செல்லமுயன்ற பன்னிரண்டு இலங்கையர்கள் கைது!

கொழும்பு, செப்.03

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி ஆஸ்திரேலியாவிற்குச் செல்வதற்கு முயன்ற 12 இலங்கையர்களை பப்புவா நியூகினியின் புலனாய்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பப்புவாநியூகினியாவின்தலைநகர்மொரெஸ்பையில்உள்ள ஹோட்டலொன்றிலிருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுத் தூதுவர்களுடன் மனோ எம்.பி சந்தித்துப் பேச்சு

கொழும்பு, செப்.03

மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், மக்கள் கண்காணிப்புக்குழு ஏற்பாட்டாளருமான மனோ கணேசன் எம்.பி. கொழும்பிலுள்ள பல்வேறு நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை உப்புவெளியில் இளைஞர் சுட்டுக்கொலை

திருகோணமலை, செப்.03

திருகோணமலை,உப்புவெளிப் பகுதியில் நேற்று இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வீடியோப் படப்பிடிப்பாளர் ஒருவர் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் யோகராசா

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவின் ஆதரவாளர் அம்பாறையில் படுகொலை

### இதனால் அங்கு நேற்று ஹர்த்தால்

அம்பாறை, செப்.03

அம்பாறை, திருக்கோவில் வைத்தியசாலைக்கு முன்னால் வைத்து நேற்றுமுன்தினம் இரவு 8.50 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கருணா குழு (தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்) ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்தார்.

திருக்கோவில் மூன்றாம் குறுக்குத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர்களுக்காக ஆஸ்திரேலியாவில் ஆராதனை

மெல்போர்ன், செப்.03

இலங்கை வாழ் தமிழ் மக்களின நிரந்தர சமாதானம் மற்றும் சுபீட்சகரமான எதிர்காலம் குறித்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (7ஆம் திகதி) ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் விசேட ஆராதனைகள் மற்றும்பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# IIS
## கணிக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரவுகள் ஆரம்பம்

2008 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே உங்களுக்காகவே விசேட கட்டணச் சலுகையில் அனைத்துக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| பிரிவுகள் | ஆரம்பம் | |
|---|---|---|
| பிரிவு 01. → | 05.09.2008 | காலை 10.00 மணி |
| பிரிவு 02. → | 06.09.2008 | |
| பிரிவு 03. → | 19.09.2008 | |
| பிரிவு 04. → | 20.09.2008 | |

கற்கை நெறிகள்

01. Diploma in Microsoft Office
02. Diploma in Desk Top Publishing
03. Diploma in Internet Technology
04. Diploma in Hardware Technology
05. Diploma in Computer Programming
06. Diploma in Eng.Drawing & AutoCAD
07. Diploma in Computerized Accounting
08. Diploma in Audio & Video Editing
09. Diploma in Data Base Management System
10. Certificate in Auto CAD
11. Certificate in Java Programming
12. Certificate in Visual Basic Programming



"கணனிக் கல்விக்குத் தனித்துவம் மிக்கதுமான IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்."

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 Fax : 021 222 6933 E.Mail : iiscc@sltnet.lk



# மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)
## பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம்

அவர்கள் 06.09.2008 மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றார். உடன் தொடர்பு கொள்ளவும்.

மருந்துகள் குறிப்பிட்டளவே கொண்டுவரமுடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புக்களை உடனே தொலைபேசியில் (0777-569205, 0652224019, 0719315664) தொடர்பு கொண்டால் அவர்களுக் கேற்றவாறு மருந்துகளை கொண்டுவருவார்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க்கே [illegible]றுகள், வெள்ளைபோகுதல், குழந்தைப்பேறின்மை, வாதநோய், [illegible]லயிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றி, பயம், நடுக்கம்,நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப் பான்மை உண்டாக காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்கமுடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபு ணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

**Sexual Disorders(ஆண்மைச் சக்தி குறைவு)**

(பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எவ்வித மோசமான தாம்பத்தியக் கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமா கியுள்ளனர். ஆரம்பநிலை மனநோயாளிகள் முன்கூட்டியே வந்து சிகிச்சை பெறவும்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ பாலாஜி இன்
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.Contact No.: 0777 569205&0719315664


# 'ஒலிம்பியாட்' தேசிய போட்டிக்கு தெரிவானோர் விவரம்

ஒலிம்பியாட் 2008- மாகாணமட்டப் பரீட்சையில் சித்தியடைந்து தேசியமட்டத்துக்கு தெரிவாகியுள்ள யாழ்.வலயத்துக் குட்பட்ட மாணவர்களின் விவரம் வெளியிடப் பட்டுள்ளது.

தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளன.

தெரிவானவர்களை பெற்றோருடன் இன்று புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.வலய அபிவிருத்திப் பிரிவுக்கு வருமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரி.இராசலிங்கம் கேட்டுள்ளார்.

தெரிவானோர் விவரம் பாடரீதியாக வருமாறு:-

### கணிதம்

மனோகரன் துசிதா- கரவெட்டி மாணிக்கவாசகர் வித், மேசிகன் பத்மநாதன்- புனித பொஸ்கோ வித், பிரபாகரன் கரிணி- யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை,யோகச்சந்திரன் அபிராமி- வல்வை அ.மி.த.பா, பாலச்சந்தரன் அருண்யன்- வவுனியா சைவப்பிரகாச வித், மணிசேகரன் டரண்யா- மகாஜனாக் கல்லூரி.

### விஞ்ஞானம்

சிவபாலன் பராபரன்- யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, அலெக்ஸ் ஜொயலாசன்- மன்னார் புனித சேவயர் ம.ம.வி, மணிவண்ணன் திரிசிகா- யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, நாகராசா சாய்மீரா ரம்பைக்குளம் ம.வி, தயாநிதி டிலோசா யா/இந்து ஆரம்ப பாடசாலை, தனுசயன் கருணாகரன்- புனித பொஸ்கோ வித். (01)

## தவறிவிட்டது

கேதாரநாதன் ஜனகன் என்பவரது தே.அ. அட்டை (823370121V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் அடங்கிய (I.C கவர்) பேர்ஸ் நல்லூர் ஆலய சூழலில் 31.08.2008 ஞாயிற் றுக்கிழமை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெ டுத்தவர்கள் சிவா பலசரக்கு வாணிபம், இல.59, மணிக்கூட்டு கோபுர வீதி, (பெருமாள் கோயிலடி) யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் தத்துத வவும் சன்மானம் வழங்கப்படும். T.P. இல:- 0774469866

## தவறிவிட்டது

கந்தையா மார்க்கண்டு தாஸன் என்பவருடைய தே.அ.அட்டை (492620351V) செட்டிபுலம், வேலணை எனும் முகவரி உடையது மற்றும் கடற்றொழில் ஆவணங்கள் என்பன 27.08.2008 அன்று வங்களாவடிக்கும் வேலணைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: இந்திரா பல்பொருள் வாணிபம், வங்களாவடி, வேலணை.

**தவறிவிட்டது:** கிருஷ்ணா என்பவரது NP. M.A xxxx எனும் இலக்க முடைய மோட்டார் சைக்கிளின் வருடாந்த வரிச்சிட்டை, காப்புறுதிப் பத்திரம், இராணுவ அனுமதி அட்டை, ஆகியன பிறவுண் வீதி, குமாரசாமி வீதி, பலாலி வீதி கோண்டாவில் டிப்போவுக்கு இடையில் 01.09.2008 தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: விக்கினேஸ்வரா அச்சகம் இல.150, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பூசைகள் நிறைவுற்றதும் மு.ப. 10.30 மணிக்கு சைவப்புலவர்சொல் வேந்தர் பொன். சுகந்தனின் 'இதிகாசங்கள்' என்னும் தலைப்பிலானதொடர் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (202)


# யாழ்ப்பாணம் மாநகர சபை
## வீதி வேலைக்கான கேள்வி அறிவித்தல் 2008

கீழ்குறிப்பிட்ட வீதி வேலைகளுக்கு யாழ்ப்பாண மாநகர சபையில் 2008 ஆம் ஆண்டிற்கு பதவி செய்துள்ள வலுவுள்ள (ICTAD) நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தின் பதிவுள்ள வற்வரி செலுத்தும் மிகத்தகைமையுடைய ஒப்பந்தக்காரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1.கேள்விப் பத்திரங்கள் 2008.09.10 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் 2008.09.11 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

3. கேள்விகள் யாவும் 2008.09.11 ஆம் திகதி நண்பகல் 2 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரையிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வீதியின் பெயருடன் வீதி வேலைக்கான கேள்வி என எழுதி மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது இதற்கென ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ நேரடியாக சமர்ப்பிக்கப்படவேண்டும்.

5. இவ்வீதி செப்பனிடலுக்குத் தேவையான தார் ஒப்பந்தக்காரராலேயே மாநகர சபை களஞ்சியத்துக்கு வழங்கப்பட்டு பதிவுகளை மேற்கொண்டபின் மீளப்பெற்று குறித்த வீதி வேலைக்கு பயன்படுத்தி உறுதிசெய்தல்வேண்டும்.

6.மேலதிக விவரங்களை யாழ்.மாநகர சபையின் நல்லூர் இந்து விடுதியில் அமைந்துள்ள வீதி வேலைப் பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலையின் பெயரும் அமைவிடமும் | ஆகக் குறைந்த பதிவுத்தரம் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கமுடியாத கேள்வி வைப்புப் பணம் (வற்வரி நீங்கலாக) | வற் |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுநூலக அணுகுவீதி (சப்பல் வீதி) தாரிட்டு செப்பனிடல். | M8 | 12,000.00 | 1,200.00 | 180.00 |
| 2 | சட்டநாதர் கோவில் தாரிட்டுசெப்பனிடல். | M9 | 7,320.00 | 75[illegible]00 | 112.50 |
| 3 | (ஸ்ரான்லி வீதி பொன்னம்பலம் வீதியை இணைக்கும் வீதி தாரிட்டு செப்பனிடல்) | M9 | 2520.00 | 300.00 | 45.00 |

குறிப்பு: வேலைகள் யாவற்றையும் 2008.10.15 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்படவேண்டும் எனக்கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மு.செ.சரவணபவ, மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்குவேலியில் வசிக்கும் ஆசாரி இ.சரவணபவன் (பழனி) அவர்களின் இளையமகன் ச.அருளகன் சிறிய வயதினில் முதன் முதலாக தனது கைவண்ணத்தினூடாக மூஷிகவாகனம் ஒன்றினை செதுக்கி சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் ஆலயத்திற்கு அர்ப்பணிப்புச் செய்கிறார். அருளகன் மென்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அம்மா, அப்பா,
அண்ணாமார், அக்கா.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.



# கண்ணீர் அஞ்சலி

பொறியியலாளரும், யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவரும், எமது வழிகாட்டியுமான திரு.ப.கிரிதரன் அவர்களின்பாசமிகு தந்தை

## நடராஜா பத்மநாதன் (சட்டத்தரணி)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
தெ.மே.ப.நோ.கூ.சங்கம்,
கைதடி.



# மரண அறிவித்தல்
## அப்புத்துரை வைரமுத்து



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மாசிவன், நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை வைரமுத்து நேற்று (02.09.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - சேதுப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பிச்சபிள்ளை, சின்னப்பிள்ளை, அப்புசாமி, ஞானம், சின்னம்மா, செல்லம்மா இரத்தினம் ஆகியோ ரின் அன்புச் சகோதரரும், கேதுராசா (பாரீஸ்), பலராமன் (லண்டன்), நாகேஸ்வரி, விஜயரங்கன், விஷ்ணு (டென்மார்க்), அமரர் வாசுதேவன், விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திராணி, தவமலர், ரஞ்சினி, அமரர் காராளசிங்கம், நாகேஸ்வரி, குகவதனி(டென்மார்க்), உமாதேவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அனுசா, நவவித்தியா, தவரஞ்சித், வரதன் (பாரிஸ்), ராதிகா, கௌசிகன், பிரகாஷ், வினோபா, கோபிராஜ், அபிஷா (டென்மார்க்), அனோஷா (டென்மார்க்), நிஷாந்தினி, சிவரஞ்சன், கிருபைநாதன் ஆகியோரின் பேரனும், சேதுவர்மன், மயுசன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.09.08) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசிவன்,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.



# விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவுகள்

மலர்வு: 17.12.1978
உதிர்வு: 04.09.2007



மண்ணில்: 19.04.1953
விண்ணில்: 07.04.2007



அமரர் ஜோண் டேவிற் கொஸ்ரா (அனுஷ்ரன்)

திருமதி மரியதாஸ் றெஜினா (புஸ்பம்)

'ஆண்டவரே உமது இரக்கத்தையும் உமது பேரன்பையும் நினைவு கூர்ந்தருளும்' சங்கி 25-6

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நாளை (04.09.2007) வியாழன் மு.ப. 11 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.06, புனித அன்னம்மாள் லேன்,
பாண்டியன் தாழ்வு.

இவர்களின் பிரிவுத்துயரில்:
ஆசீர்வாதம் ஜோண் டேவிற்,மனைவி யோகராணி குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்டி சிந்தாத்திரை மாதா திருவிழா 11 ஆம் திகதி

யாழ்ப்பாணம், செப்.3

வேலணை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சாட்டி-சிந்தாத்திரை மாதா திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

திருவிழாவுக்கான முன்னேற்பாட்டு கூட்டம் நேற்று முன்தினம் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் போக்குவரத்து, சோதனை, குடிதண்ணீர், சுகாதாரம் மற்றும் விடயங்கள் ஆராயப்பட்டன.

கூட்டத்தில் வேலணை பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம், ஆலய பங்கு தந்தையர், கிராம அலுவலர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (202-95)

## ஒன்று கூடல்

நாவற்குழி, செப்.3

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோர்களுக்கான மாதாந்த ஒன்று கூடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமூக நலத்துறை திணைக்களத்தின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட அலுவலர் அ.ஞானவேல் அறிவித்துள்ளார். (202-288)

## யாழ். மாவட்ட அரச ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விசேட அ. அட்டை

யாழ்ப்பாணம், செப்.3

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச திணைக்களங்களில் சேவைபுரியும் ஊழியர்களுக்கு முன்னுரிமையாக விசேட அடையாள அட்டைகளை வழங்குவதற்கு யாழ். மாவட்ட பாதுகாப்புக் கட்டளைத் தளபதி மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகம் இது குறித்து யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளது.

திணைக்களத்தில் சேவைபுரியும் ஊழியரின் முழுப்பெயர், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், சொந்த விலாசம், ஊழியரின் தொழில் மற்றும் வேலை செய்யும் இடம், வதிவிட கிராம சேவகர் பிரிவு மற்றும் கிராம சேவகரது பிரிவு, இலக்கம் ஆகிய விவரங்களைக் குறிப்பிட்டு உரிய திணைக்களத் தலைவரது ஒப்பத்துடன் உடன் தமக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி குறிப்பிட்ட திணைக்களத் தலைவர்களைக் கோரியுள்ளார். (202-300)

## நவாலியில் வீதிகளில் போடப்பட்டுள்ள களிமண்ணால் போக்குவரத்து சிரமம்

### தார் வீதி அமைத்துத்தரக் கோரிக்கை

நவாலி, செப்.3

பருவகால மழை ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் நவாலியின் சில வீதிகளில் போடப்பட்ட களிமண் அகற்றப்படாததால் போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சின்னப்பா வீதி, ஞான வைரவர் வீதி ஆகியவற்றில் குவிக்கப்பட்டுள்ள களிமண் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் அதை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2006 ஆம் ஆண்டு நியாப் II திட்டத்தின் கீழ் இவ் வீதிகள் குளத்துக் களிமண்ணிட்டு செப்பனிடப்பட்டன.

கடந்த ஆண்டு பெய்த பெருமழையினால் வெள்ளம் ஓட முடியாததுடன் சேறும் சகதியுமாய் இருந்ததினால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் மக்கள் ஒன்று சேர்ந்து வீதி அமைக்கப்பட்ட மண்ணை வெட்டி இரு மருங்கிலும் குவித்துவிட்டு பிரயாணம் செய்து வருகின்றனர். தற்போது பருவகால மழை ஆரம்பித்து விட்டதால் இவற்றை உடன் அகற்றுமாறும் தார் வீதியொன்றை அமைத்துத்தருமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது சம்பந்தமாக நவாலி கிழக்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர். (202-100)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப.3

வலிமேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திக்தி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202-300)

## கரவெட்டிப் பிரதேச கிராம அலுவலரிடையே முகாமைத்துவப்போட்டி

கரவெட்டி, செப்.3

வடமராட்சி தெற்கு, மேற்கு கரவெட்டிப் பிரதேச கிராம அலுவலர்களிடையே முகாமைத்துவப் போட்டி நடத்தப்பட்டது.

போட்டியில் முதலாமிடத்தை கரணவாய் கிழக்கு (ஜே/350) கிராம அலுவலர் கே.ரி.புவனேந்திரனும் இரண்டாம் இடத்தைக் கரவெட்டி மத்தி (ஜே/367) கிராம அலுவலர் எம்.தங்கத்துரையும்-

மூன்றாம் இடத்தை வல்வெட்டி மத்தி (ஜே/356) கிராம அலுவலர் ரி.நேத்திராணந்தம், சமரபாகு (ஜே/357) கிராம அலுவலர் வி.தயானந்தா ஆகியோரும் பெற்றனர்.

## யாழ்.மாவட்டத்தில்

## வீட்டுத்தோட்டம், பாடசாலை பழமரச்செய்கை ஆகியவற்றை ஊக்குவிப்பதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், செப்.3

யாழ்.மாவட்டத்தில் வீட்டுத்தோட்டம் மற்றும் பாடசாலைகளில் பழமரச் செய்கை ஆகியவற்றை ஊக்குவிக்கும் நோக்குடன் சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ளது.

இதற்கென இந்நிறுவனம் சுமார் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின்படி யாழ். மாவட்டத்திலுள்ள 650 விவசாயிகளுக்கும் 50 பாடசாலைகளுக்கும் விதைகளும், பழமரக்கன்றுகளும் வழங்கப்படும். அத்துடன், இந்த விவசாயிகளுக்கும் பாடசாலைகளுக்கும் இத்திட்டத்தின் மூலம் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

உள்ளூர் உற்பத்திகளுக்கான ஊக்கப்படுத்தல்களை உருவாக்கிக் கொள்வதன் மூலம் நிலையான வருமானத்தை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். மாவட்ட திட்டமிடல் செயலகம் தெரிவித்தது. (202-300)




## கரவெட்டி செயலர் பிரிவில் காலங்கடந்த பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை

கரவெட்டி, செப்.3

கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரிவுகளில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் தொடர்பான நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது.

இம் மாத நடுப்பகுதியில் இந்த நடமாடும் சேவை பிரதேச செயலக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவை மூலம் காலங்கடந்த பதிவுகளை மேற்கொள்ள விரும்புவர்கள் தமது ஆவணங்களை நேரடியாக பிரதேச செயலக பதிவாளர் கிளையில் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (202-70)

## நவாலி சென்.பீற்றேர்ஸ் பாடசாலைக்கு குழாய்க்கிணறு

நவாலி, செப்.3

நவாலி சென்.பீற்றேர்ஸ் பாடசாலையில் குழாய்க்கிணறு ஒன்றை சமூக சேவைகள் அமைச்சு அமைத்துக் கொடுத்துள்ளது. (202-100)

## ஆசிரியர் பயிற்சிக் கலா சாலைகளுக்கு அதிபர், உப அதிபர்கள் நியமனம்

அச்சுவேலி, செப்.3

நாடளாவிய ரீதியில் உள்ள சகல ஆசிரியர் கலாசாலைகளுக்கும் அதிபர், உப அதிபர் பதவிகளுக்கு ஆளணியினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் பெற்றவர்களின் பெயர், விவரங்களைப் பொதுச் சேவைகள் ஆணைக் குழு வெளியிட்டுள்ளது.

ஆசிரியர் கலாசாலைகளில் அதிபர், உப அதிபர் பதவிகளுக்கு இறுதியாக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவுகள் நடைபெற்றுள்ளன. முன்னர் இரண்டு தடவையாக நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று, ரத்துச் செய்யப் பட்டு, மூன்றாவது தடவையாக நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர், விவரம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

விவரம் வருமாறு:-

**மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை**

அதிபர் - சீ.லட்சுமிசுந்தரம், உப அதிபர்- கே. காராளசிங்கம்.

**கொட்டக்கலை ஆசிரிய கலாசாலை**

அதிபர் - எஸ்.முரளிதரன், உப அதிபர்- பெயர் அறிவிக்கப்படவில்லை.

**அட்டாளைச் சேனை ஆசிரிய கலாசாலை**

அதிபர்- ஜனாப் எம். எல். அப்துல் கபீல், உப அதிபர்- ஜனாப் ஏ.எஸ். சுபைர்.

**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

அதிபர்- செல்வி மலர் சின்னையா, உபஅதிபர்- எஸ். செந்தில்மணி.

**பலாலி ஆசிரிய கலாசாலை**

அதிபர்- பெயர் அறிவிக்கப்படவில்லை, உப அதிபர்- த.காங்கேசபிள்ளை.

**உணவட்டுண ஆசிரிய கலாசாலை**

அதிபர் - திருமதி மல்லிகா கெட்டிகே, உப அதிபர் திருமதி ஜி.டபிள்யூ.சமர திவாகர.

**மகரகம ஆசிரிய கலாசாலை**

அதிபர்- திருமதி ஏ.எல். சி. சந்திரலதா, உப அதிபர் - டபிள்யூ. டீ. ஜெயசேன.

**பலப்பிட்டிய**

அதிபர்- டபிள்யூ. விஜயானந்தா, உப அதிபர்- திருமதி ரி.என்.ஐ.பீரிஸ்.

**கிறாகம**

அதிபர் - ஜி.பி.குணசேன ராஜபக்ச, உப அதிபர் - ஐ.எம்.எஸ்.இலங்கைக்கோன்.

நியமனக் கடிதங்கள் விரைவில் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்படவுள்ளன. (202-11)

## பண்ணாகம் மெய்கண்டான் ம.வியின் நிகழ்வுகள்

சுழிபுரம், செப்.3

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் தினமலர் வெளியீடும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேசும் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, சிறுவர் பாதுகாப்பு (இலங்கை) நிறுவண உதவித்திட்ட முகாமையாளர் உமாசங்கரலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிறுவுனர் நினைவுப் பேருரையை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கலாநிதி ந.யோகராஜன் நிகழ்த்துவார். (202-28)

## நாவாந்துறைப் பிரதேச அபிவிருத்திக்கு நிதி

குருநகர், செப்.3

நாவாந்துறைப் பிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

நாவாந்துறை (ஜே/84) கிராம சேவையாளர் பிரிவு மற்றும் (ஜே/85) கிராம சேவையாளர் பிரிவில் இயங்கிவரும் மகளிர் புனர்வாழ்வு நிலையத்திற்குத் தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காகத் தலா 75 ஆயிரம் ரூபாவும், நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்திற்குத் தளபாடம் கொள்வனவு செய்வதற்காக ஒரு இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (202-51)





வட்டு-தென்னிந்திய திருச்சபையில் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த 5 கல்வியியலாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் சிறப்புரையாற்றுவதை முதலாவது படத்திலும்,

கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன், வண.ஜி.நடராஜாவுக்கு (அதிவிசேட தரம்-1) திருவிவிலியம் நூல் வழங்கி கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் பழைய மாணவர்கள், அபிமானிகள், நண்பர்கள்,கௌரவிப்புப்பெற்ற கல்வியியலாளர்களான வண.ஜி.நடராஜா (அதிவிசேட தரம் I - ஆரம்பப் பாடசாலை மேற்பார்வையாளர்), திருமதி ஜெ. ஜெமித்திரரஞ்சன் (விஞ்ஞானத்துறை சிரேஷ்ட ஆசிரியை, விஞ்ஞானத்துறை தலைவர், யாழ்.மாவட்ட [illegible] திருமதி சாந்தா யசோதரன் (தமிழ்துறை தலைவர் - சிரேஷ்ட ஆசிரியை), திருமதி எஸ்.ஜே.தேவசகாயம் (ஆரம்ப பிரிவு சிரேஷ்ட ஆசிரியை), என். யோகராஜா (வேலைத்தள அத்தியட்சகர்) ஆகியோரை வாழ்த்துவதனை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: ரமேஷ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுர்த்தி விரதங்களுள் தலையாயது ஆவணிச் சதுர்த்தி



விநாயகப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதங்களுள் ஆவணிச் சதுர்த்தி சிறப்பு வாய்ந்ததொன்றாகும். இது மகிமையும் புனிதமும் மிக்கதொரு விரதமாகக் கருதப்பட்டு வருகின்றது.

ஆவணிச் சதுர்த்தி என்பது ஆவணி மாதத்துச் சுக்கில பட்சத்தில் வரும் சதுர்த்தியிலே - வளர்பிறை நான்காம் நாள் அனுட்டிக்கும் விநாயக சதுர்த்தியாகும்.

விநாயக விரதங்களுள் மிக விசேடமானதாக இது கருதப்படுகிறது. இந்துக்கள் யாவரும் மிகவிரும்பி அனுட்டிக்கும் விரதம் இதுவாகும். விநாயகர் ஆலயங்களில் சிறப்பாகவும், ஏனைய ஆலயங்களில் பொதுவாகவும் இவ் விரத நாளில் விசேட அபிஷேகம் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவது வழமையாகும். விநாயகப் பெருமான் உற்பவமான தினமாக இது கருதப்படுவதால் இவ்விரதத்தினை பூஜை வழிபாடுகளுடன் இல்லங்களிலும் கைக்கொள்ளும் வழக்கம் தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஆவணி மாதத்து வளர்பிறைச் சதுர்த்தித் திதியன்று இவ்விரதம் அனுட்டிக்கப்பட்டாலும் அன்றைய தினம் மத்தியானத்திலும் சதுர்த்தி நிற்றல் அவசியமான தொன்றாகக் கருதப்பட்டு வருகின்றது.

### வரலாற்றுச் சிறப்பு

கந்த புராணத்தில் சிறப்பித்துக் கூறப்படும் இந்த விரதமானது, சூத முனிவரால். பஞ்சபாண்டவருக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையைக் கொண்டுள்ளது. கௌரவர்களின் கொடுமையினால் வனவாசம் செல்ல நேர்ந்த பாண்டவர்கள், காட்டிலே மிகுந்த கஷ்டமும்,- மனவேதனையும் அடைந்திருந்த நிலையில் ஒருநாள் சூத முனிவரைச் சந்திக்க நேர்ந்தது.

அப்போது தருமர் தமது கஷ்டங்கள் நீங்க சூத முனிவரை வழிகேட்டார். அதற்கு உரிய வழியாக இந்த விநாய சதுர்த்தி விரதத்தைக் கைக்கொள்ளுமாறு சூத முனிவர் தருமருக்கு உபதேசம் செய்தார். அதுமட்டுமல்லாமல் விநாயக சதுர்த்தி விரதத்தை முன்னர் அனுட்டித்து பலன் பெற்றவர்களது வரலாற்றையும் எடுத்துக் கூறினார்.

தமயந்தி நளனை மீண்டும் அடைந்ததும், கிருஷ்ணர் ஜாம்பவதியையும் சிவமந்தகமணியையும் அடைந்ததும், இராமன் சீதையை மீட்டதும், இந்திரன் அசுரப் பகையை வென்றதும், பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்ததும் இந்த விரத மகிமையினால்தான் என்பதையும் தருமருக்கு சூதமுனிவர் எடுத்து விளக்கினார். இதைக் கேட்ட பாண்டவரும் முறைப் படி விநாயக சதுர்த்தி விரதத்தைக் காட்டிலேயே அனுட்டித்து உரிய காலத்தில் தமது ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர் என்பது புராண வரலாறு.

இப் பூவுலகில் மனிதர்களாகப் பிறப்பெடுத்த நாம் எமது வாழ்க்கையில் சந்திக்கும் கஷ்டங்கள், துன்பங்களினின்றும் விடுபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்று வாழ்க்கையில் நலமும் மகிழ்வும் பெற வேண்டுமானால் இந்த ஆவணிச் சதுர்த்தி விரதத்தை உரிய முறையில் கடைக்கொண்டு விநாயகர் அருளால் எமது கஷ்டதுன்பங்கள் நீக்கி வாழ்வில் நலமும் வளமும் பெற

**இன்று ஆவணிச் சதுர்த்தி**

இயலும்.

இந்த ஆவணி சதுர்த்தி விரதத்தை நோற்போர் அதிகாலை துயிலெழுந்து நித்திய கர்ம அனுட்டானங்களை முடித்துக் கொண்டு பிரார்த்தனை வழிபாடுகள், ஆலய தரிசனம் என்பவற்றில் ஈடுபடுதல் வேண்டும். மத்தியானம் ஒரு பொழுது அமுது உண்ணலாம். இரவு பட்டினி இருக்க இயலாதவர்கள் பால்,பழம் அல்லது பலகாரம் உண்ணலாம் என விரத அனுட்டான விதிமுறைகளில் கூறப்பட் டுள்ளது.

ஆலயங்களில் முதற்பூஜை விநாயருக்கே நடைபெறும். அதன் பின்தான் மூலமூர்த்திக்குப் பூஜை நடைபெறுவதை நாம் அறிவோம். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வதென்ன? இந்துக்களின் முழுமுதற் கடவுள் விநாயகரே என்பதும், அடியவர்கள் தத்தமது துன்பங்களை நீக்கி இன்பம் அருளும் அருள்சக்தி விநாயகரே என்பதும் தொன்று தொட்டு இந்து மதத்தவர் மத்தியில் நிலவி வரும் நம்பிக்கையாகும்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த தெய்வமான விநாயகப் பெருமானுக்குரிய அனைத்து விரதங்களிலும் முக்கியமான சிறப்புக் கொண்டதாகக் கொள்ளப்படும் இன்றைய ஆவணிச் சதுர்த்தி நன்னாளில் நாமும் விநாயகப் பெருமானை வேண்டி விரதமிருந்து அவரது இஷ்ட சித்திகளைப் பெற்று உய்வோமாக!

– தசா.

## சிங்களமொழிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,செப்.3

தேசிய மொழிகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட அடிப்படைச் சிங்களம்-3 இற்கான பரீட்சைப் பெறுபேறுகள் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றியோர் அலுவலகத்தில் தமது பெறுபேறுகளைப் பார்வையிடுமாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி.ம.வசந்தகுமார் கேட்டுள்ளார். (202-207)

## 'எதுவரை' நூல் அறிமுக நிகழ்வு

சுப்பிரமணியம் வரதகுமாரின் 'எதுவரை' தமிழ் நாடகம், குறும்பட விமர்சனங்கள் நூல் அறிமுகவிழா நேற்று பருத்தித்துறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வடமராட்சி வடக்கு படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற நிகழ்வில் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் பா.இரகுவரன் நூல் அறிமுக உரையை நிகழ்த்தினார். (203)

## சமய சந்நிதிகளில்

மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் கோயில் வருடாந்த பெருந்திரு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 16 நாள்கள் திருவிழா இடம்பெற வுள்ளது.

15 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் பிராயசித்த தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன (202-86)

* * *

தொல்புரம் கிழக்கு மடத்துப்பிள் ளையார் ஆலய சண்டேஸ்வரர் பவனி வர புதிய தேர் அழகிய வேலைப்பாடுகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இத்தேரில் சுவாமி பவனி வரும் வைபவம் ஆலயத் தேர்த்திருவிழாவான இன்று புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு நடை பெறவுள்ளது.

சென்ற ஆண்டு பிள்ளையார், முருகன் பவனிவரும் புதியதேர்கள் செய்யப்பட்டன. இவ்வாண்டு மூன்று புதிய தேர்களில் பிள்ளையார், முருகன், சண்டேஸ்வரர் பவனிவரும் காட்சி அமையவுள்ளது. வெளிநாட் டில் வாழும் தனியொருவர் உபயமாக இத்தேர்கள் உருவாக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (202-28)

## வாசகர் திருமுகம்

### கல்வியியற் கல்லூரி அனுமதியும் காத்[illegible]க்கும் மாணவர்களும்

சமீபத்தில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்வது தொடர்பான வெளிவந்த செய்தியானது க.பொ.த. 2007இல் (உ/த) பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளைப் பெற்று தே.க.கல்லூரி அனுமதிக்காகக் காத்திருக்கின்ற மாணவர்களாகிய எமக்கு பேரிடியைக் கொடுத்துள்ளது. எவ்விதமான முன்னறிவித்தலோ, முன்னேற்பாடான கல்வி நடவடிக்கைகளோ செய்யப்படாத நிலையில் பெரிய எதிர்பார்ப்புகளோடு தே.க.கல்லூரி அனுமதிக்காக காத்திருக்கும் எமக்கு இந்த அறிவித்தல் பெரிய ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது. பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள மாணவர்களின் மகிழ்ச்சி ஒருபுறமிருக்க சராசரி பெறுபேறுகளைப் பெற்று பெரும் நம்பிக்கையுடன் இருந்த எங்களுக்கு தெளிவும் திட்டமுமில்லாத இவ் அறிவித்தல் பெரும் குழப்பத்தையே ஏற்படுத்தி உள்ளது.

கடந்த நாள்களில் வெளியான வெட்டுப்புள்ளிகளின் படி தே.க.கல்லூரியாவது கைகொடுக்கும் என்ற பெரும் நம்பிக்கையுடனிருந்த எங்களுக்கும் எமது பெற்றோருக்கும் இவ்வறிவித்தல் நிச்சயமாக ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. "எங்கள் கல்விக்கான முடிவு என்ன? எங்கள் எதிர்காலம்தான் என்ன? பலவிதமான நெருக்கடிகள் அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினைகள் மத்தியிலும் பிள்ளைகள் பெரும் நம்பிக்கையாயிருக்கிறார்கள் என்ற எண்ணக்கருக்களோடு காத்திருக்கும் எங்கள் பெற்றோருக்கு நாம் என்ன பதிலைச் சொல்ல முடியும்? இப்படிப் பலவிதமான அங்கலாய்ப்புகளுடன் திரிசங்கு நிலையிலுள்ள மாணவர்களாகிய எமக்கு தே.க.கல்லூரியின் புதிய அனுமதி மற்றும் கல்விச் செயற்பாடுகள் சம்பந்தமான தெளிவான விவரமான ஒருபதிலே இப்போது தேவையாகும். நாம் பொறுமையுடன் காத்திருப்பதா அல்லது எமது எதிர்காலத்துக்கான மாற்றுத்திட்டத்துக்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதா? என்று திக்குமுக்காடி நிற்கின்றோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயம் சம்பந்தமாக உரிய இடங்களில் தொடர்பு கொண்டு தே.க.கல்லூரி அனுமதி மற்றும் செயற்பாடுகள் பற்றிய விவரங்களை பத்திரிகைமூலம் வெளியிடுவார்களாயின் எமக்குப் பேருதவியாக இருக்கும்.

காத்திருக்கும் மாணவர்களில் ஒருவர்.


## யா/இணுவில் மத்திய கல்லூரி
### பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களைப் பாராட்டுகின்றோம்

2007ஆம் வருட க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர்

1)செல்வன் ஸ்ரீகரராசா வாகீசன் - சித்திரமும் வடிவமைப்பும்
2)செல்வன் ஆறுமுகம் ரஜீவன் -கலை
3)செல்வன் சின்னராசா உமாகரன் -கட்புல சாதனத்துறை
4)செல்வன் துரைசிங்கம் சித்தார்த்தன் -சித்திரமும் வடிவமைப்பும்
5)செல்வி கவிதா சத்தியானந்தன் -வணிகத்துறை
6)செல்வி பிரசன்னா இராமநாதன் -கலை
7)செல்வி ஜெயராணி மகாதேவன் -கட்புல சாதனத்துறை
8)செல்வன் கிருபானந்தம் நிசாந்தன் -சித்திரமும் வடிவமைப்பும்
9)செல்வன் சிவபாதம் சிவகரன் -சித்திரமும் வடிவமைப்பும்
10)செல்வி மதுராந்தி ஜெயசிங்கம் -சித்திரமும் வடிவமைப்பும்
11)செல்வன் இராஜரட்ணம் கரிகரன் -கலை

*கல்வியில் உயர்ந்து சேவையில் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.*

கல்விச் சமூகம்,
யா/இணுவில் மத்திய கல்லூரி.

(77643)



WUSC SRI LANKA

## அறிவித்தல்

கனேடிய உலகப்பல்கலைகழக சேவையின்[WUSC] நிதியுதவியுடன் பங்காள நிறுவனங்களான ஊற்றுநிறுவனம் [OOTRU], அறவழிப்போராட்டக்குழு [NVDAG], சர்வோதயம்[Sarvodaya] ஊடாக மரபுரீதியற்ற தொழில்பயிற்சியினைப்பெற்று கீழ்வரும் பயிற்சிநெறிகளுக்காக NAITA பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பரீட்சைகள் பின்வரும் நேரஅட்டவணைப்படி,பின்வரும் இடங்களில் நடைபெற வுள்ளது.

| பயிற்சி நெறியின்பெயர் | பரீட்சை நடைபெறும் திகதிகளும், பரீட்சைநிலையமும். |
|---|---|
| மரவேலை [Carpenter] | 16,17,18திகதி புரட்டாதி மாதம் 2008 ஆண்டு ஊற்றுநிறுவனம்[OOTRU] மாலுசந்தி. காலை8.30 தொடக்கம் மாலை4.30வரை |
| மேசன் [Mason] | 19,20,22 திகதி புரட்டாதி மாதம் 2008 ஆண்டு ஊற்றுநிறுவனம்[OOTRU] மாலுசந்தி காலை8.30 தொடக்கம் மாலை4.30வரை |
| மோட்டார் சைக்கிள் திருத்துனர் [Motor cycle mechanic] | 23,24,25 திகதி புரட்டாதி மாதம் 2008 ஆண்டு சர்வோதயம் [Sarvodaya] கோப்பாய் காலை8.30 தொடக்கம் மாலை4.30வரை |
| நீர்க்குழாய் பொருத்துநர் [Plumber] | 26,27 திகதி புரட்டாதி மாதம் 2008 ஆண்டு அறவழிப்போராட்டக்குழு [NVDAG] தபால்பெட்டி இலக்கம்:2 நுணாவில் சாவகச்சேரி காலை8.30 தொடக்கம் மாலை4.30வரை |
| வீட்டு வயறிங் [Electrical Wireman] | 16,17,18,19,20,22,23 திகதி புரட்டாதி மாதம் 2008 ஆண்டு ஊற்றுநிறுவனம்[OOTRU] மாலுசந்தி காலை8.30 தொடக்கம் மாலை4.30வரை |

மேற்குறிப்பிட்ட விபரங்களுக்கு அமைவாக NAITA பரீட்சைகள் அனைத்தும் நடைபெறும் என்பதனையும், இப்பரீட்சைக்கான அனுமதிஅட்டைகளை பெற்றுக் கொள்வதற்காகவும்,மேலும் இதுவிடயம் தொடர்பாக ஏதாவது மேலதிக தகவல் தேவைபடின் பின்வரும் அலுவலக விலாசத்துக்கு 10.09.2008 தொடக்கம் 14.09.2008 வரை அன்று புதன்கிழமை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

நீர்க்குழாய் பொருத்தும் பயிற்சிமாணவர்கள் :-அறவழிப்போராட்டக் குழு [NVDAG] தபால்பெட்டி இலக்கம்:2 நுணாவில் சாவகச்சேரி.

மோட்டார் சைக்கிள் திருத்தும் பயிற்சிமாணவர்கள் :- சர்வோதயம்[Sarvodaya] சுண்டுக்குளி,யாழ்ப்பாணம்.

மரவேலை,மேசன்,வீட்டு வயறிங் பயிற்சிமாணவர்கள் :- ஊற்றுநிறுவனம்[OOTRU] மாலுசந்தி,வடமராட்சி

கனேடிய உலகப்பல்கலைக்கழக சேவை,82/1A செட்டிதெரு நல்லூர்,யாழ்ப்பாணம் (C-554352) தொ.பே.இல:-021-2229858


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குகபாலா அரைச்சதம் விளாசினார் யூனியனை மடக்கியது பற்றிக்ஸ்

வலி.வடக்கு,செப்.3

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கிடையிலான 'சுப்பர் சிக்ஸ்' கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 157 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியின் ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 06 விக்கெட்டுகளை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

குக்பாலா மூன்று நான்குகளுடன் 85 பந்துகளில் 55 ஓட்டங்களையும், நிலோஜன் ஐந்து நான்குகளுடன் 71 பந்துகளில் 39 ஓட்டங்களையும், கவாஸ்கரன் நான்கு நான்குகள், ஒரு ஆறுடன் 33 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 65 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யூனியன் கல்லூரி சார்பில் பந்துவீசிய சாயிராம் 7 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், பானுசன் 6 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், சைலஜன் 4 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், அகீசன் 6 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 35 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

211 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யூனியன் கல்லூரி துடுப்பாட்டத்தில் ஜொலிக்காமையால் 33.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 53 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

ஜோய் கீசியன் ஒரு நான்குடன் 11 ஓட்டங்களையும் அனுசியன் 30 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 17 ஓட்டங்களும் பெறப்பட்டன.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்துவீசிய நிதர்சன் 10 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், கவாஸ்கரன் 7 ஓவர்கள் பந்துவீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், நோபேட் 4 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 3 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் மொரிஸ் மிறோசன் 3 பந்துகளை மட்டும் வீசி ஓர் ஓட்டத்தைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (50-86)



# 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸை 6 விக்கெட்டுகளால் வென்றது கொக்குவில் இந்து!

வலி.வடக்கு,செப்.3

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்படும் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினருக்கான 'சுப்பர் சிக்ஸ்' கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆறு விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

கவாஸ்கர் நான்கு நான்குகளுடன் 56 பந்துகளில் 38 ஓட்டங்களையும் குகபாலா 25 பந்துகளில் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 23 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்து விசிய சதுர்சன் 10 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் புவிராஜ் 10 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும், தாருஜன் 10 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

113 ஓட்டங்கள் என்ற குறைந்த ஓட்ட எண்ணிக்கையை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி 46.4 ஓவர்களில் 04 விக்கெட்டுகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

ஆதித்தன் மூன்று நான்குகளுடன் 54 பந்துகளில் 43 ஓட்டங்களையும் பங்கீஜன் ஒரு நான்குடன் 37 பந்துகளில் 20 ஓட்டங்களையும், தாருஜன் 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் பந்துவீசிய கவாஸ்கரன் 9.4 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் நோபேட் 09 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் நிலக்சன் 10 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி தான் விளையாடிய முதல் சுற்றில் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளதுடன் 'சுப்பர் சிக்ஸ்' போட்டியில் இந்தப் போட்டியிலேயே தோல்வி அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

# மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாக திருமதி ஜே.எவ்.ஏ.ரூபசிங்கம் நியமனம்

யாழ்ப்பாணம்,செப்.3



யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாக திருமதி ஜே.எவ்.ஏ.ரூபசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் விளையாட்டுத்துறைத் திணைக்களத்தினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட இவர், பிரதேச செயலகங்களில் உள்ள விளையாட்டு உத்தியோகத்தர்களைச் சந்தித்து விளையாட்டுத் துறையின் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடி வருகின்றார்.

கடந்த பல வருடங்களாக யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையின் பதில் அதிகாரியாகவும் வலைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளராகவும், யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம், யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் தற்போது பணியாற்றி வருகிறார். பாடசாலை மாணவியாக இருந்த காலத்தில் வலைப்பந்தாட்டத்தில் சிறந்த வீராங்கனையாகத் திகழ்ந்த இவர் மாகாண மற்றும் தேசிய மட்ட அணிகளிலும் இடம்பிடித்திருந்தார்.

அதன்பின்னர் விளையாட்டு உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இவர் யாழ்.மாவட்டத்தில் வலைப்பந்தாட்டத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளதுடன், தேசிய மட்டத்தில் பிரகாசிக்கும் வீரர்கள், வீராங்கனைகளையும் உருவாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (50-86)



யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம், இலங்கை வங்கியின் பாதுகாப்பு அதிகாரி ரி.கருணாகரனுக்கு மத்தியஸ்தர்களுக்கான கௌரவ பரிசு வழங்குவதையும் அருகில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங் கச் செயலாளர் கே.மனோகர் நிற்பதையும் படத்தில் காணலாம். (1)

# சென்.பற்றிக்ஸ் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி

வலி.வடக்கு,செப்.3

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணி இறுதிப்போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி ஆதரவுடன் நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான 'சுப்பர் சிக்ஸ்' போட்டியில் நான்கு போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம் இறுதிப் போட்டியில் விளையாட சென்.பற்றிக்ஸ் தகுதி பெற்றுள்ளது.

'சுப்பர் சிக்ஸ்' போட்டியில் இடம்பெற்ற ஐந்து ஆட்டங்களில் கொக்குவில் இந்துக் கல்லூரியுடனான போட்டி தவிர ஏனைய போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம் இறுதிப் போட்டியில் விளையாட அது தகுதி பெற்றுள்ளது.

இரண்டாவது அணியைத் தெரிவுசெய்வதில் ஏனைய பாடசாலை அணிகளுக்கு இடையேயான போட்டிகள் மழை காரணமாகத் தடைப்பட்டிருந்தமையால் முடிவு எட்டப்படாத நிலை காணப்படுகின்றது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய பாடசாலைகளிடையே கடும் போட்டி நிலவுகின்றது. (50-86)

# இரண்டாம் கட்டப் போட்டிகள் 9, 10ஆம் திகதிகளில் வவுனியாவில்

யாழ்ப்பாணம்,செப்.3

வடமாகாண விளையாட்டுப் போட்டியின் அடுத்த கட்டப் போட்டிகள் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் கப்பல் மூலம் வவுனியாவுக்குச் செல்கின்றனர்.

வடமாகாண விளையாட்டுப் போட்டியின் முதற் கட்டப் போட்டிகள் கடந்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகி நடைபெற்றன.

இந்தக் காலப்பகுதியில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெற்றமையால் 19 வயதுக்குட்பட்ட, 21 வயதுக்குட்பட்ட வீரர்களுக்கான போட்டிகள் நடைபெறவில்லை.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை இன்று புதன்கிழமையுடன் முடிவடைவதால் மேற்படி பிரிவினருக்கான போட்டிகள் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. (50-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்






யாழ்ப்பாணம் ஞானக்குழந்தை இல்லத்தின் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் அண்மையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட 'யுனிசெப்' நிறுவன சிறுவர் பாதுகாப்பு அதிகாரி செல்வி மகி நொடா, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் அதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை முதல் படத்திலும் மாணவர்கள் விளையாட்டில் ஈடுபட்டிருப்பதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவாகரத்துப் பெறுவதற்கு இப்படியும் ஒரு காரணம்!

தொலைக்காட்சித் தொடரில் கதாநாயகனாக நடிக்கும் நடிகரோடு நான் கனவிலாவது சந்தோஷமாக இருப்பேன்" எனக் கூறிய அல்ஜீரிய பெண்மீது, அவரது கணவர் விவாகரத்து வழக்குத் தொடர்ந்துள்ளார்.

துருக்கிதொலைக் காட்சியில் 'நூர்' என்னும் தொடர் நாடக மொன்று ஒளி பரப்பாகி வருகிறது. இதில் மொகனாட் என்னும் சௌந்தர்ய மிக்க 24 வயது இளைஞர் கதாநாயகனாகநடித்துவருகின்றார்.

இத்தொடர் நாடகம் அல்ஜீரியாவிலும் ஒளிபரப்பாகி வருகிறது. இங்கு அநேக பெண் ரசிகர்கள் கதாநா யகன் மீது அபிமானங் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இப் பெண்களில் ஒருவர் கதாநாயகன் அழகையும் நடிப்பையும் அண்டை வீட்டுப் பெண்ணிடம் ஆர்வத்தோடு புகழ்ந்து கொண்டிருந்தார்.

இறுதியில் இக் கதாநாயகனோடு கனவிலாவது நான் மகிழ்ச்சியில் மிதப்பேன். எனக்கு அப்படி ஒரு பித்து என்றார். இதைப் பெண்ணின் 40 வயதுக் கணவர் கேட்டுவிட்டார்.ஆத்திரமடைந்த கணவர்இப்படிசலன புத்தி கொண்ட நீ எனக்குமனைவியாக இருக்க முடியாது. குடும்பத்துக்கும் இலாயக்கில்லை எனப் பொரிந்து தள்ளினார்.

அத்துடன் கணவனின் ஆத்திரம் தீரவில்லை. அப் பெண்மீது விவாகரத்துக் கோரி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

## வாழ்த்துகின்றோம்



கலாபூசணம் -
கலைச்செம்மல் -
சங்கீதபூஷணம்
எல்.திலகநாயகம்போல்
அவர்கள்
இந்த ஆண்டிற்கான
வடமாகாண ஆளுநர்
விருதினைப்
பெறுவதையிட்டு
மகிழ்ச்சியடைகின்றோம்.

இவர் மேன்மேலும் பல விருதுகளைப் பெற்று உடல், உள நலத்துடன் கலையுலகிற்கு தனது பணியினைத் தொடர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கோயில் வீதி,
நல்லூர். (77630)

மாணவர்கள்,
பெற்றோர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 08 . 1930 | 04 . 08 . 2008 |



### திருமதி வேதநாயகி கனகசபாபதி

திதி:திருதியை (03.09.2008)

எமை விட்டு நீர் பிரிந்து திங்களொன்று கடந்ததுவே,
திங்களொன்று மட்டுமல்ல ஆண்டு பல சென்றிடுனும்,
உம் நினைவு எம் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும்,
உமது ஆத்மா சாந்திபெற ஆண்டவனார் அருளட்டும்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது குடும்பத் தலைவி நோய்வாய்ப்பட்டிருந்த வேளை அவருக்குச் சிகிச்சை அளித்து உதவிய வைத்தியர்களுக்கும், அவரது மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து துயர் பகிர்ந்தோருக்கும் தபால், தந்தி, தொலைபேசி ஊடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலியைப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நன்றியை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (03.09.2008) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சிவவாசா"
கற்பகப் பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (சி/554339) குடும்பத்தினர்.

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 . 05 . 1981 | 25 . 08 . 1998 |



### செல்வி நிஷாலினி நாகேந்திரம் (சுகி)

(பழைய மாணவி, பரு.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை)
திதி: ஆவணிச் சதுர்த்தி (03.09.2008)

பத்து ஆண்டுகள் பறந்தே போயிற்றுதம்மா
பறந்து போன உன்னை இன்னும் காணோம் நாம்
மறந்து போக என்ன தகுதியிருக்கு
கறந்து போக்கி உன் உயிர்க் கார்தான் ஈடாவார்.

உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'சுகிஸ்தான்'
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

உன் பிரிவால் என்றென்றும் வாடி நிற்கும்:
பெற்றோர், உறவினர்கள். (77628)

IDM
இலங்கை அரசினாலும், சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட கணனிக்கல்லூரி
www.idm.lk
After A/L
புதிய பிரிவுகள் ஆரம்பம்: (வார, வார இறுதி நாள் வகுப்புக்கள்)

BTEC Diploma Courses - UK
(International Diplomas - Edexcel International - UK)
- Diploma in Business Management
- Diploma in ICT
- Diploma in Computer & Network Technology
- Diploma in Computerized Accounting Packages
- Diploma in Electrical & Electronic Engineering

Other Courses
Ms Office, ICDL, vb.net, Java, PHP & MySQL,Web Desining
kids program
சிறுவர்களுக்கான பயிற்சி நெறி – 4 வயது முதல் இணைந்து கொள்ளலாம்.

மாணவர்களுக்கு சர்வதேச தரத்துடனான சான்றிதழ்களை வழங்கும் நோக்கில் எம் நிறுவனம் உலகில் உள்ள பின்வரும் பிரபல்யமான நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

Affiliations
1) An institution coming under the Council for Information Technology (CINTEC) Ministry of Science and Technology.
2) A Training center approved by the Tertiary and Vocational Education Commission.
3) The first ISO 9001 : 2000 Certified IT Training Institution in Sri Lanka.
4) The Proud owerns of the country's first ICT Training Institution.
5) The developers of the curriculum for ICT Training forVocational Training Institution's under-SEMP ministry of Education Sri Lanka.
6) A member of the Association of ComputerTraining Organizations (ACTOS).

University Affiliations
- London Metropolitan University -UK
- Wolverhamption University -UK
- Northumbria University -UK
- University of Portsmouth -UK
- Charles Sturt University - Australia
- City of London College -UK
- The University of Greenwitch-UK
- University of Sunderland -UK
- Holmesglen Institute - Australia
- University of Moratuwa - Partner organization for collaboration provision of the BIT External Degree Program.

IDM Business Partners
Australian Computer Society (ACS)
British Computer Society (BCS)
NCC Education Center - UK
Edexcel International - UK

216 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மூனாமலை ஒழுங்கை, மானிப்பாய்.
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
021-2229901

மானிப்பாயில் ......
A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான அனைத்து கணினி வகுப்புக்களும் ஆரம்பம்!!
- Advanced Diploma in ICT - ADICT
- Diploma in Computer Hardware Eng.
- Computerized Accounting Packages
- Diploma in Ms Office
- Diploma in Mobile Phone Repairing
- Diploma in Desktop Publishing
- Diploma in AutoCAD

மிகக் குறைந்த பயிற்சிக் கட்டணம்.
சர்வதேச தரம் வாய்ந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மிகவும் பெறுமதிவாய்ந்த சான்றிதழ்கள்.

** தற்பொழுது பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன !! !! **

மேலதிக விபரங்களுக்கு :-
UNI
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 - 221 - 6433
( மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே )

A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதியபிரிவுகள் ஆரம்பமாகின்றன.

புலமைப்பரிசில் திட்டம் 2008

80% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science 5 Months ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing 4 Months ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Designing 4 Months ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing 4 Months ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering 3 Months ~~10,000~~ 2,000 |
| Diploma in AutoCAD 3 Months ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office 3 Months 1,500 | Accounting Package 3 Months ~~10,750~~ 2,150 |

மாணவர் நலன்கருதி Lab இணையும் இணைக்கப்பட்டுள்ளது
வரையறையற்ற செய்முறைபயிற்சி
Multimedia Projector மூலமான விரிவுரைகள்

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in multimedia | ~~5,500~~ | 2,750 |
| Diploma in Video Editing | ~~6,500~~ | 3,250 |
| Diploma in Networking | ~~10000~~ | 5000 |

ஆரம்பம்:
Batch I 05/09/2008 : 11.00
Batch II 06/09/2008 : 01.00
Batch III 07/09/2008 : 01.00
Batch IV 10/09/2008 : 11.00

COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#167, KASTHURIYAR RD, JAFFNA. 021 222 8250

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணக்கடலில் உயிரினங்கள் வாழ்கின்றனவா?

ஒரு பெரும் நீர்ப்பகுதிக்கான இந்தப் பெயர் விசித்திரமாகத்தான் தெரிகின்றது. ஆனால், வேறு எந்தக் கடல் பகுதிக்கும் இப்படியான பெயர் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

பழங்கால கிரேக்க எழுத்தாளர்களால் முதலில் இது சாக்கடல் (மரணக்கடல் -DEAD SEA) என்று அழைக்கப்பட்டது. ஹீப்ரு இனத்தவர்கள் பல பெயர்களால் அழைத்துள்ளார்கள். முக்கியமாக 'உப்புக்கடல்' என்பது அவர்கள் வழங்கிய பெயர்களில் ஒன்று. அராபியர்கள் அதனை 'மூழ்கும்கடல்' என்று அழைத்தார்கள்.

இந்தக் கடலின் விசேஷத்தன்மைதான் என்ன?

இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்குமிடையில் காணப்படும் ஒரு குறுகலான பெரிய உப்புக்குளம்தான் இந்தப் பெயருடன் விளங்குகின்றது.

சாக்கடலானது 48 மைல் நீளமானது. அதன் அகலம் 3 இல் இருந்து சில இடங்களில் 11 மைல் வரை இருக்கும். இதன் ஆச்சரியகரமான அம்சம் என்னவென்றால், உலகிலேயே மிகத்தாழ்வான நீர்ப்பகுதியைக் கொண்ட இடமாகும் இது. கடல் மட்டத்திலிருந்து அனேகமாக 400 மீற்றர் தாழ்வாக இது காணப்படுகின்றது. இக்கடலில் தென்பகுதி மிகவும் ஆழம் குறைந்து காணப்படும். அதே வேளை வடக்கில் அதன் ஆழம் 400 மீற்றர் வரை செல்லும்.


சாக்கடலில் இருந்து ஆறுகள் எதுவும் பிரிந்து ஓடுவதாக இல்லை. ஆனால் வடக்கில் இருந்து ஜோர்தான் ஆறு விழுகின்றது. சுற்றியுள்ள மலைச்சரிவுகளிலிருந்து பல சிற்றாறுகளும் ஓடைகளும் விழுகின்றன. இதற்கு வரும் மேலதிக நீரானது வெளியேறுவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் நீர் ஆவியாக மாறுவது. இதனால் இங்கு பல்வேறு கனிப்பொருள்கள் தேங்கிக் கிடக்கின்றன. உப்பு, பொட்டாசியம், மக்னீஸியம் குளோரைட் போன்றவை யைக் குறிப்பிடலாம்.

உலகிலேயே மிகக் கூடிய உப்புக்கலவையைக் கொண்டது சாக்கடல். கடல் நீரைவிட சுமார் ஆறு மடங்கு இதில் உப்பு உண்டு. பல்வேறு விதமான கனிப்பொருள்கள் இருப்பதால் இதில் நீந்துபவர்கள் தமது தலை மற்றும் தோள்கள் எப்பொழுதும் நீருக்கு மேலேயே மிதந்து கொண்டிருக்க நீந்துவர். இந்தக் கனிப்பொருள்கள் மனிதனுக்கு முக்கியமானவை. இந்தக் கடலில் மட்டும் இரண்டு மில்லியன் தொன் பொட்டாசியம் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இது செயற்கை உரம் தயாரிப்பதற்கு அத்தியவசியமானதொரு பொருள்.

பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் சாக்கடலானது அது இன்றிருக்கும் இடத்திற்கு சுமார் 420 மீற்றர் உயரத்திலிருந்ததாகக் கருதப்படுகின்றது. அதாவது நடுநிலைக் கடலைவிட உயரத்தில் இருந்துள்ளது. அக்காலத்தில் அதில் உயிரினங்கள் வாழ்ந்துள்ளன. பிற்காலத்தில் ஏற்பட்ட ஒரு நீண்ட வரட்சியின் போது அதன் பெரும் பகுதி நீர் ஆவியாகமாறிவிட இன்றைய மட்டத்துக்கு படிப்படியாக இறங்கிவிட்டது.

சாக்கடல் நீரை நீங்கள் சுவைத்துப் பார்த்தால் உப்பாக இருப்பது மட்டுமல்ல அதில் காணப்படும் மக்னீஸியம் குளோரைடு காரணமாக சுகவீனமுறவும் நேரலாம். அந்த நீர் ஒருவித மென்மையையும் எண்ணெய்த்தன்மையையும் கொண்டிருக்கும். மக்னீஸியம் குளோரைட்டுதான் இதற்குக் காரணம்.

சாக்கடலில் உயிர் இனம் எதுவும் வாழ்வதற்கு வாய்ப்பில்லை.




ஜோர்டான் ஆறு தன்னோடு மீன் இனங்களைக் கொண்டுவந்து இதில் சேர்க்கின்றது.

ஆனால் அவை இறந்து விடுகின்றன. அவை கடல் பறவைகளுக்கு உணவாகின்றன.

ராம்

# பழமையான ஓர் உயிரினம்



தேள். இது மனித இனம் தோன்றுவதற்கு முன்னர் 270 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே மண்ணில் தோன்றி வாழ்ந்து வருகின்றது.

கடுமையான குளி ராய் இருந்தால் என்ன? கொடுமையான வெப்பமாய் இருந்தால் என்ன? மிகவும் சகவாசமாய் வாழக்கூடிய இனம் தேள். பனிப்பிரதேசத்தில் பல மாதங்கள் உணவின்றி வாழ தேள்களால் முடியும். சாதாரணமாக தேள் தண்ணீர் குடிப்பதில்லை. தான் உண்ணும் உணவுப் பொருள்களிலிருந்து தனக்குத் தேவையான தண்ணீரை இது பெற்றுக் கொள்கின்றது. உலகில் 600 வகையான தேள் இனங்கள் உயிர்வாழ்கின்றன.

— தாசன்

## கொஞ்சம் சிந்தி

பத்து வருடத்துக்கு முன் நீ
பாதி உடையுடன்
பசி தீர்த்துக்கொள்ள
வழியற்று பட்டினியுடன்
இருந்தாய் - அந்த
காலமதை நீ மறந்துவிடாதே
தகர வீட்டு வெக்கை
தாங்காமல் காற்று வாங்க
மரநிழல் கீழ் நீ
தங்கிய காலமதை
நீ மறந்துவிடாதே
பசிக்கும் வேளை உனக்கு
உணவு தந்து உடுப்பு
தந்து வாழவைத்த
பெரியார் சிலர்
அவர்களை மறந்துவிடாதே
ஆனால், இன்று
வெளிநாட்டிற்கு பிள்ளைகள்
சென்ற உடன்
ஏசி றூமில் இருந்து
கோலிங் பெல் அடிக்காமல்
உள்ளே வந்த
பெரியாரை ஏசுகிறாய்
இது நியாயமா?
கொஞ்சம் சிந்தி
அன்று சிந்திய கண்ணீரை!

சுபா,
மானிப்பாய்.

# ஆபிரிக்க இளம் பெண்ணுக்கு இருதயத் துடிப்பை அரை மணிநேரம் நிறுத்தி வைத்து அறுவைச் சிகிச்சை

## சென்னை மருத்துவர்கள் சாதனை

ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்த இளம் பெண்ணுக்கு இருதயத் துடிப்பை அரைமணி நேரம் நிறுத்தி வைத்து அறுவைச் சிகிச்சை செய்து சென்னை மியாட் ஆஸ்பத்திரி டாக்டர்கள் சாதனை படைத்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான ருவாண்டாவை சேர்ந்த பெண் ஊமிவாணா கிறிஸ்டின் (வயது 24). நெஞ்சுவலி மற்றும் மூச்சுத் திணறலால் அவதிப்பட்டு வந்த அவர் சிகிச்சை பெறுவதற்காக சென்னை மியாட் மருத்துவமனைக்கு 2 மாதங்களுக்கு முன்பு வந்தார். அவரை மியாட் மருத்துவமனையின் இருதய நோய் சிகிச்சை மையத்தைச் சேர்ந்த டாக்டர்கள் பரிசோதித்துப் பர்த்தார்கள்.

இருதயத்தில் இருந்து மூளை, வயிறு, குடல், சிறுநீரகம் உட்பட உடலின் மற்ற பாகங்களுக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் ரத்தக்குழாய் மகாதமணியின் 4 பகுதிகளும் பழுதடைந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மேலும், இருதயத்தில் உள்ள இரண்டு வால்வுகளில் ரத்தக்கசிவு ஏற்படுவதும் கண்டறியப்பட்டது. எனவே, அறுவைசிகிச்சைமூலம்மகாதமணியின்அனைத்து பகுதிகளையும் சரிசெய்யவும், பழுதடைந்த 2 வால்வு களை மாற்றவும் டாக்டர்கள் முடிவு செய்தனர். அறுவைச் சிகிச்சையை 3 கட்டங்களாக செய்ய திட்டமிட்டனர்.

### அரை மணி நேரம் நிறுத்திவைப்பு

மிகவும் சிக்கலான பகுதியான மகாதமணியின் முதல் 2 பகுதிகளையும், (இருதயத்தின் மேல்புறம்) பழுதடைந்த 2 வால்வு களை (அயோடிக் வால்வு, மிட்ரல் வால்வு) மாற்றவும், 2 ஆவதாக நெஞ்சுப் பகுதியில் உள்ள மகாதமணி ரத்தக் குழாயை யும் 3 ஆவதாக வயிற்றுப் பகுதியில் உள்ள ரத்தக் குழாயை சரி செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

இதற்காக மியாட் ஆஸ்பத்திரி இருதய அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.வி.பாஷி தலைமையில் மருத்துவக் குழு அறுவைச் சிகிச்சைபணியை தொடங்கியது. முதல்கட்ட அறுவை சிகிச்சையின்போது அரைமணி நேரம் இருதயத் துடிப்பையும், ரத்த ஓட்டத்தையும் நிறுத்தினார்கள். செயற்கைக் கருவி மூலம் சுவாசத்தையும் உடலின் மற்றச் செயற்பாடுகளையும் இயங்க வைத்தார்கள். டாக்டர்கள் 6 மணி நேரம் போராடி அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக முடித்தார்கள்.

### உலக சாதனை

ஒரு மாத இடைவெளிக்குப் பிறகு 2 ஆம் கட்ட அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டனர். 45 நிமிடத்திலேயே அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாக முடித்து ரத்தக் குழாயை சரிசெய்தார்கள். பின்னர் 5 நாளில் 3 ஆவது கட்ட அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அரைமணி நேரம் நடந்த இந்த அறுவைச் சிகிச்சையில் வயிற்றுப் பகுதியில் உள்ள ரத்தக்குழாய் வீக்கம் ஏ.எஸ்.டி.என்ற நவீன கருவி மூலம் சரி செய்யப்பட்டது. அறுவைச் சிகிச்சை மூலம் ரத்தக் குழாய் தமனியின் 4 பகுதிகளையும் சரிசெய்யப்படு வது உலகிலேயே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மருத்துவ சாதனை குறித்து மியாட் மருத்துவமனைத் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இருதய அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் வி.வி.பாஷி, டாக்டர் சிவக்குமார், கதிர்வீச்சு நிபுணர் டாக்டர் முரளி ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

### காலம் மாறுகிறது!

30 ஆண்டுகளுக்கு முன்பு ஏதாவது ஒரு சிக்கலான அறுவைச் சிகிச்சை என்றால் வெளிநாட்டு மருத்துவமனை அல்லது வெளிநாட்டு டாக்டர்களை பரிந்துரை செய்வார்கள். ஆனால், இப்போது வெளிநாட்டினர் சென்னை டாக்டர் களையும் சென்னையில் உள்ள மருத்துவமனை களையும் பரிந்துரை செய்யும் அளவுக்கு முன் னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது. தற்போது நாங் கள் செய்திருக்கும் அறுவைச் சிகிச்சைக்கு மொத்த கட்டணம் ரூபா 8½ இலட்சம்தான்.

இதே அறுவைச்சிகிச்சையை இங்கிலாந்திலோ அல்லது வேறு ஏதேனும் ஒரு வெளிநாட்டிலோ செய்தால் ரூ.70 லட்சம் வரை செலவாகும். இருதய அறுவை சிகிச்சைக்கு ஆப்பிரிக்க நாடுகளின் அரசுகள் பரிந்துரை செய்யும் அளவுக்கு மியாட் மருத்துவமனை வளர்ந்துள்ளது. சாதாரணமாக இருதயத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியது இருந்தால் சற்று இடைவெளி விட்டுத்தான் செய்யப்படும்.

### நலமாக இருக்கிறார்

ஆனால், நோயாளி வெளிநாட்டைச் சேர்ந்தவர் என்பதால் அவரால் நீண்ட காலத்திற்கு இங்கே தங்கி இருக்க முடியாது. எனவே, ஒரு மாத இடைவெளியில் 2 ஆவது அறுவைச் சிகிச்சையையும், 5 நாள் இடைவெளியில் கடைசி அறுவைச் சிகிச்சையையும் வெற்றிகரமாக முடித்துவிட்டோம். தற்போது அந்த பெண் நல்ல உடல் நிலையில் இருக்கிறார்.

# புதன் பொய்கை



சில ஆண்டுகளுக்கு முன்னர் சுவிஸில் ஒரு மாநாடு நடைபெற்றது. 'போர்த் வேர்ல்ட் கொங்கிரஸ் ஒவ் தி இன்ரர்நஷனல் அசோசியேசன் ஒவ் போல்ட் கெற்றெற் பீப்பிள்' என்று ஆங்கிலத்தில் தலைப்பிட்டு இந்த மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டின் ஆரம்பத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட சங்கத்திற்கு சின்னங்களாக முட்டை, 'கோல்ப்' பந்து (தங்கள் தலைகளை ஒத்தவை) என்பவற்றை வைத்து அவற்றை வழிபட் டார்கள்.

இந்த மாநாட்டின் முக்கிய குறிக்கோள் 'உலகின் அதி அழகான வழுக்கைத் தலையுள்ளவரை' தேர்ந்தெடுப்பது தான்.

மாநாட்டில் வைத்து பல வித தேர்வுகள் வைத்து 'அகில உலக அழகிய வழுக்கைத் தலையர்' என்னும் பட்டத்தை 52 வயதான பிரெஞ்சுக்காரர் லூயிஸ் ஹெகாட்டுக்கு வழங்கப்பட்டதாம்.

இம் மாநாட்டில் சிறப்பு விருந்தினர்களுக்கு இராட்சத சீப்புகள் வழங்கப்பட்டன.

–சுவாதி, பாசையூர்.

# 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாணயங்கள் இஸ்ரேலில் மீட்பு

இஸ்ரேலின் தென்ஜெருலேம் நகரில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட 15 வெள்ளி நாணயங்கள், புறாக்கள் வசிக்கும் பொந்தொன்றிலிருந்து தொல்பொருள் ஆய்வாளர்களால் மீட்கப்பட்டுள்ளன.

கிறிஸ்துவுக்குப் பின் 70 ஆம் ஆண்டில் ரோமர்களால் பிப்லிக்கால் ஆலயம் சேதமாக்கப்பட்ட காலகட்டத்தில், இந்த நாணயங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தாம் கருதுகிறார் என இந்த ஆய்வுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் ஒடெட் லிப்ஸ்சிட்ஸ் தெரிவித்தார்.

மேற்படி ஆய்வுக்குழுவால் ரமாத் ராஹெல் பிரதேசத்தில் பழைமையான நாணயங்கள் மீட்கப்படுவது இது நான்காவது தடவையாகும். கிறிஸ் துவுக்குப் பின் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த சுமார் 380 நாணயங்கள் மேற்படி குழுவால் ஏற்கனவே மீட்கப்பட்டுள்ளன.


அதேசமயம், 1700 வருடங்கள் பழைமையான 62 ரோமன் நாணயங்களை மூவரைக் கொண்ட பிறிதொரு குழுவினர் டெர்பியில் கண்டு பிடித்துள்ளார்கள். இந்த நாணயங்கள் கிறிஸ்துவுக்குப் பின் 296 ஆம் ஆண்டுக்கும் 305 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்டவை எனக் கருதப்படுகின்றது.

# ஒரே ஒரு வழி

அணுகுண்டை முதன் முதல் தயாரித்த போது அந்தப் பணிகளை மேற் பார்வை செய்து வந்தவர் விஞ்ஞானி ரொபேர்ட் ஒப்பன் ஹீமர். அமெரிக்க காங்கிரஸ் குழு முன் அணுகுண்டு குறித்து இவ் விஞ்ஞானி விளக்கமளித்தார். அணுகுண்டு விளைவிக்கவல்ல அழிவுகள் குறித்தும் அவர் தெளிவாக விளக்கினார். அப்போது அவரிடம் 'இந்த அழிவுகளிலிருந்து தப்புவது எப்படி?' என கேள்வி எழுப்பப்பட்டது. 'அதற்கும் நிச்சயமாக ஒரு வழி இருக்கிறது' என விஞ்ஞானி கூறினார். அவ்வழி குறித்த விளக்கத்தைக் கேட்பதற்காக அனைவரும் அவர் முகத்தை ஆர்வத்துடன் பார்த்தார்கள்.

விஞ்ஞானி கூறிய விளக்கம் 'அதுதான் சமாதான வழி' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய மூன்று கிராம சேவையாளர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் செயலக பொது மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கிராம அலுவலர் கே.ரவிக்குமாருக்கு பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஆர்.சோமசுந்தரத்திற்கு பிரதேச செயலகக் கணக்காளர் எஸ்.கிருபாகரன், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ஜீ.மகேந்திரராஜாவிற்கு உதவித் திட்டப் பணிப்பாளர் கே.சிறிபாஸ்கரன் ஆகியோர் நினைவுப் பரிசில்கள் வழங்குவதை முதல் 3 படங்களிலும் காணலாம்.

பிரதேச செயலர் மற்றும் செயலக உத்தியோகத்தர்களுடன் பாராட்டுப் பெற்றவர்கள் சேர்ந்து இருப்பதை நாலாவது படத்தில் காணலாம். (படங்கள்: சுந்தா)


### கடை வாடகைக்கு

யாழ்.ஸ்ரான்லி வீதியில், பெற்றோல் செற்றுக்கும் முட்டாஸ் கடைச்சந்திக் குமிடையில் 10' X 100' சதுர அடி கடை தொலைபேசி வசதியுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 021 222 3184

### மணமகள் தேவை

1977, NRC கிறிஸ்தவ உயர் கௌரவ குடும்பம் லண்டனில் கௌரவமான வேலையில் உள்ள மணமகனுக்கு லண்டனில் PR உள்ள NRC மணமகளும் 1981, NRC, உயர் கௌரவ குடும்பம் Building Engineering Course முடித்து எல்லோராலும் நன்கறியப்படுகின்ற அரசசார்பற்ற நிறுவனமொன்றில் பொறுப்பான பதவியில் இருக்கும் மணமகளுக்கு அரச பதவி/ சொந்தத் தொழில்/ நிரந்தரத் தொழிலிலுள்ள NRC மணமகனும் தேவை.

அருள் முருகன் இல்லம், 03.யாழ்.வீதி, [பெருமாள் கோயிலடி] யாழ்ப்பாணம் 222 9334 தமிழ் இந்து கிறிஸ்தவ சகல சமூகங்கள் சகல குடும்பங்களிலுமுள்ள சகல மணமக்களுக்கான சேவைகள்.


# ஓய்வூதியம் பெறுவதற்கான வயதெல்லையை 63ஆக் அதிகரிப்பது குறித்து ஆராயப்படுகின்றது

கொழும்பு, செப்.3

அரச ஊழியர்களின் ஓய்வுபெறுவதற்கான வயதெல்லையை 63 ஆக அதிகரிப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக ஓய்வூதியத் திணைக்கள இயக்குநர் கே.ஏ. திலகரட்ண தெரிவித்துள்ளார்.

55 வயதில் ஓய்வுபெறும் அரச ஊழியர்கள் பின்னர் மற்றுமொரு அரச சேவையில் இணைவதன் மூலம் அரச ஓய்வூதியத்தையும் சம்பளத்தையும் ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்வதை சுட்டிக் காட்டியுள்ள அவர் இதனை தடுப்பதற்காகவே ஓய்வு பெறுவதற்கான வயதெல்லையை அதிகரிப்பது குறித்து ஆராயப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

வயதெல்லையை அதிகரிக்கும் யோசனையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆராய்ந்துள்ளாரெனவும் - தொழிற் சங்கங்களின் கருத்தைப் பெற்ற பின்னரே அவர் இது குறித்து முடிவெடுப்பார் என்றும் ஓய்வூதியத் திணைக்கள இயக்குநர் திலகரட்ண தெரிவித்துள்ளார்.

தற்போதைய விதிமுறைகளின்படி அரச ஊழியர் ஒருவர் 55 வயதில் ஓய்வு பெற வேண்டும். எனினும், அவர்கள் 57 வயது வரை சேவை நீடிப்பைக் கோரலாம். எனினும், 60 வயதில் கண்டிப்பாக ஓய்வு பெற வேண்டும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மீண்டும் அமைச்சுக்களின் செயலாளர்களாக இணைந்து கொண்டுள்ளமையையும் இதன் மூலம் பெருமளவு சம்பளத் தையும் ஓய்வூதியத் தையும் பெறுகின்றனர் என்றும் சுட்டிக் காட்டப்பட் டுள்ளது.

எனினும், ஓய்வு பெறும் வயதெல்லையை அதிகரிப்பதன் காரணமாக பொதுச் சேவைக்குப் புதிதாக ஆட்களை சேர்ப்பது பாதிக்கப்படும். இதன் காரணமாக கனிஷ்ட உத்தியோகத் தர்களின் பதவி உயர்வுகளும் பாதிக்கப்படலாம் என அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

(சி)


### Study in India
### பிரிந்தாவன் கல்லூரி
பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது

B.Sc. - உயிரியல்/உயிரி தொழில்நுட்பம்/நுண்ணுயிரியல்/ கணனி விஞ்ஞானம்
B.B.B. - வர்த்தக முகாமைத்துவம்
B.C.A. - கணனி பிரயோகம்
B.Com. - வர்த்தகம் + கணனி

பிரிந்தாவன் பொறி இயல் கல்லூரி
விஸ்வேஸ்வரையா தொழில்நுட்ப கல்லூரியுடன் இணைந்தது

B.E * தகவல் விஞ்ஞானம் & பொறியியல்
* இலத்திரனியல் & பொறியியல்
* கணனி விஞ்ஞானம் & பொறியியல்
* சிவில் பொறியியல்.

### பணியாளர் தேவை

தொலைத் தொடர்பு நிலையத்துக்கு பணியாளர் தேவை. நேரில் வரவும்.
தொடர்பு:
நாதன்ஸ் தொலைத் தொடர்பு நிலையம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

### துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் உற்சவகால விஞ்ஞாபனம்

அரசடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா விஞ்ஞாபனம்
03.09.2008 மு.ப. 10 மணிக்கு
ஆவணி சதுர்த்தி திருவிழா

**வருடாந்த அலங்காரத் திருவிழா**

04.09.2008 காலை 9 மணிக்கு சுவாதி நட்சத்திர சுபவேளையில் முதலாம் திருவிழா அபிஷேக பூசையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையுடன் சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும்.

05.09.2008 2ஆம் திருவிழா தொடக்கம் 13.09.2008 10ஆம் திருவிழா வரை பி.ப. 3 மணிக்கு அபிஷேக பூசையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையுடன் சுவாமி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும் என்பதனை அடியார்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

துணவி,
வட்டுக்கோட்டை. (77551) ஆலய பரிபாலன சபை.


# மதுபான விடுதியில் 100 வயதிலும் பணி!

லண்டன், செப்.3

இங்கிலாந்திலேயே, அதிக வயதில் மதுபான விடுதியொன்றில் பணிபுரிபவர் ஜிம் கிறிஸ்டோவே ஆவார். இவருக்கு வயது தற்போது 100. எனினும், சுறுசுறுப்புடன் காணப்படுகிறார். உடனுக்குடன் வாடிக்கையாளர்களுக்கு மதுவை ஊற்றிக் கொடுக்கிறார்; பரிமாறுகிறார்.

இந்த மதுபான விடுதி கென்ட் மாநிலத்திலுள்ள வெல்லிங் என்னுமிடத்தில் உள்ளது. ஜிம் கிறிஸ்டோவ், கடந்த 20 ஆண்டுகளாக இங்கு பணியாற்றி வருகிறார். இப்போது வயது 100 .பதவியிலிருந்து ஓய்வு பெற இவர் விரும்பவில்லை.

''மதுபான விடுதியை நோக்கி பல்வேறு குணாதிசயங்களைக் கொண்டவர்கள் வருகிறார்கள். அவர்களைக் கண்டவுடனையே எடைபோட்டு விடுவேன். எல்லோருடனும் சரளமாக பேசுகின்றேன். இங்கிதமாகப் பழகுகின்றேன்.அதனால் எனது கடமையில் ஒரு திருப்தி. நல்ல மன நிறைவு'' என ஜிம் கிறிஸ்டோவ் , தம் மன நிறைவைக் குறிப்பிடுகிறார்.

''எனது தொழிலை நான் நேசிக்கிறேன். அதில் அக்கறை செலுத்துகின்றேன். ஆர்வம் காட்டுகின்றேன். எனக்கு எதிரிகள் கிடையா. ஆப்த நண்பர்கள் இருக்கிறார்கள் என்றும் சொல்வதற்கில்லை. அனைத்து வாடிக்கையாளர்களுடனும் எனது பணியின் பொறுப்பை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்கிறேன்'' என்றும் அவர் கூறுகின்றார்.

''இந்த மதுபான விடுதி, எனக்கு மற்றுமொரு வீடு போல இருக்கிறது. நான் தொழிலில் நீடிப்பதற்கு எந்த இரகசியமும் கிடையாது. எல்லோரையும் போல சாதாரண உணவையே உண்கிறேன். மற்றவர்களைப் போல நானும் தொழில் செய்கின்றேன் அவ்வளவு தான்'' என்றும் அவர் தெரிவிக்கின்றார்.


### The Annual General Meeting of Jaffna College Alumni Association.

The above meetting will be held on the **06th September 2008 at 3.30 p.m. in Ottley Hall**. Your presence is very much appreciated.

Annual General Meetting Agenda

* Prayer
* Minutes of the Last Ex.Co. meeting
* Secretary's Report
* Treasurer's Report
* Principal's Report
* Election of new office bearers
* Any Other Business

Hony. Secretary

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி இராஜநாயுடு இராமலட்சுமி



மலர்வு:10.03.1951
உதிர்வு:15.09.2007
திதி:சதுர்த்தி

அன்னைக்கு ஓர் அணிகலனாய்
அன்புக்கு ஒரு மணி விளக்காய்
என்றைக்கும் ஒளி வீசி நிற்கும் அம்மணி!
பண்பின் சிகரமாய் விளங்கிய தாயே
நீங்கள் மறைந்தாலும் நினைவு மறையவில்லை
நெஞ்சிலே எப்போதும் நிலைத்திருப்பீர்கள்
உங்கள் அன்பு முகத்தை எமக்கு மறக்க முடியாது!
கனிவோடு மொழி பேசியது என்றும்
எங்கள் காதுகளில் நின்று ஒலிக்கிறதே
ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (03.09.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமகன், பேரன், பேர்த்தி...

270, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (77528)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் கந்தையா வேலுப்பிள்ளை

தோற்றம் 20.06.1930
மறைவு 04.08.2008

பருத்தித்துறை ராணி பேக்கரி உரிமையாளரின் பாசமிகு தந்தையார் (தேவரன், புலோலி தெற்கு) கந்தையா வேலுப்பிள்ளை அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அந்தியேட்டிக் கிரியை இடம்பெறும் இந்நாளில் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின் றோம்.

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர்சங்கமும் வடமராட்சிக் கிளையும், உறுப்பினர்களும், ஊழியர்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பிரிவினைச் சிந்தனைக்கு வலுவூட்டும் யாழ்.மக்களின் பயண நடைமுறை

யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பொதுமக்கள் சென்று வருவதற்கான பயண அனுமதி தொடர்பாக இராணுவத் தரப்பினால் விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள், கெடுபிடிகளை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி கடுமையாக எதிர்த்திருக்கின்றார்.

இந்தக் கெடுபிடி ஏற்பாடு இரண்டு விதங்களில் மோசமான நடவடிக்கை என்று யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறிக்கு கடந்த ஒகஸ்ட் 3ஆம் திகதியும், செப்டெம்பர் முதலாம் திகதியும் தாம் அனுப்பி வைத்துள்ள இரு கடிதங்களில் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

* யாழ். குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டம் ஒன்றுக்கு ஒருவர் பயணம் செய்வதாயின், வெளிமாவட்டத்தில் இருக்கும் வேறு ஒருவர், மேற்படி விண்ணப்பதாரி அந்த இடத்துக்கு வந்து தங்கி நிற்பதற்கான சம்மதத்தை இராணுவத்துக்குத் தெரியப்படுத்திய பின்னரே பயணத்துக்கான அனுமதியை இராணுவம் வழங்கும் என்ற நடைமுறை.

* இராணுவ அனுமதி இல்லாமல் யாரும் குடாநாட்டுக்கு வெளியே - அல்லது கொழும்புக்கு - பயணம் செய்ய முடியாது என்ற கட்டுப்பாடு.

இந்த இரண்டு விதிகளுமே இலங்கைப் பிரஜைகளுக்கு அரசமைப்பின் 14 ஆவது பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறும் ஏற்பாடு என விநாயகமூர்த்தி தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடைமுறைகள் குறித்து மீளாய்வு செய்து அதனைக் கைவிடுமாறு அவர் யாழ். தளபதியைக் கோரியிருக்கிறார்.

இக்கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் இது குறித்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்து நிவாரணம் பெறும் எத்தனிப்புகள் குறித்து சிரேஷ்ட சட்டத்தரணியான விநாயகமூர்த்தி ஆராய்ந்து வருகிறார் என்றும் தெரிகின்றது.

யாழ். குடாநாட்டைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகக் கூறுகிறது அரசு. ஆனால், அங்குள்ள மக்கள் திறந்தவெளிச் சிறைக் கைதிகள்போல படைத்தரப்பினரால் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்பதே உண்மை என்று தமிழர்கள் தரப்புக் குற்றம் சுமத்துகிறது. அதனை அரசோ அடியோடு மறுக்கிறது.

ஆனால் இப்படி மாவட்டத்துக்கு வெளியே செல்வதற்கான பயணத்துக்கும் படையினரிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற விதிமுறை, உண்மையில் யாழ். குடாநாட்டில் சிக்கியுள்ள மக்கள் சிறையிலேயே அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெட்டத் தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

யாழ்.குடாநாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கிருந்து அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பிறிதொரு இடத்திற்குச் செல்வதற்குக் கடும் கெடுபிடிகள் நிறைந்த நடைமுறைகளை நிறைவு செய்து அதன் மூலம் படையினரிடமிருந்து முன் பயண அனுமதி பெறவேண்டும் என்று கட்டாயப்படுத்துவது இலங்கைத் தீவில் வேறு எந்தப் பிரதேச மக்களுக்கும் இல்லாத ஒரு விசேட ஏற்பாடாகும்.

அதுவும் வடக்கு, கிழக்கிலிருந்து தலைநகர் கொழும்புக்குத் தமிழ் மக்கள் வருவதைத் தடை செய்யக்கூடாது என்று உயர்நீதிமன்றம் ஏற்கனவே ஓர் அடிப்படை உரிமை மீறல் மனுவில் ஆணித்தரமாக உத்தரவிட்டிருக்கின்றது.

தலைநகர் கொழும்பு விடுதிகளில் இருந்து தமிழர்களைப் பலவந்தமாகப் பிடித்து வெளியேற்றும் படையினர் மற்றும் பொலிஸாரின் நடவடிக்கையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீதான விசாரணையின் போதே உயர்நீதிமன்றம் இந்தப் பணிப்புரையை விடுத்திருந்தது. அதை ப் பாதுகாப்புத் தலைமைப்பீடம் உட்பட அரசுத் தரப்பு ஏற்றுக் கடைப்பிடிக்க நீதிமன்றில் உறுதியுமளித்திருந்தது.

அப்படியிருக்க, இப்போது குடாநாட்டுத் தமிழர்கள் தலைநகருக்கும் பிற இடங்களுக்கும் செல்வதற்கு இத்தகைய கெடுபிடிகளை விதிப்பதும், அதனடிப்படையில் அவர்களின் கொழும்புப் பயணங்களைத் தடுப்பதும், உயர்நீதிமன்றத் தீர்ப்பை அப்பட்டமாக மீறும் விவகாரமாக அர்த்தப்படுத்தப்படக்கூடியது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

கொழும்பில் தெரிந்தவர், உறவினர்கள் உள்ளவர்கள் மட்டுமே - அதுவும் அத்தகைய உறவினர் அல்லது தெரிந்தவர் மேற்படி விண்ணப்பதாரி தம்முடன் தங்குவதற்கு சம்மதம் என்ற இணக்கத்தைப் படைத்தரப்புக்குத் தெரியப்படுத்திய பின்னரே - அந்த விண்ணப்பதாரிக்கு யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்பட்டு கொழும்புக்கோ, பிற இடங்களுக்கோ செல்வதற்கான அனுமதி வழங்கப்படும் என்ற நிலைப்பாடும் மிக மோசமானதாகும்.

சிரேஷ்ட சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி சுட்டிக்காட்டுவதுபோல கொழும்பில் தங்களை வைத்துப் பராமரிப்பதற்கு சம்மதம் தெரிவிப்பதற்கு உறவினரோ, தெரிந்தவர்களோ இல்லாதவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணிக்கவே முடியாது என்று கட்டுப்படுத்துவதை எந்த நியாயத்தின் கீழும் அங்கீகரிக்கவே முடியாது.

பிற மாவட்டங்களில் உள்ள ஏனைய மக்களுக்கு இல்லாத இத்தகைய விசேட தொந்தரவுகளை யாழ். குடாநாட்டு மக்களுக்கு மட்டும் விதிப்பதும் -

மற்றொரு நாட்டுக்கு விஜயம் செய்வதற்கு 'வீசா' அனுமதி பெறுவது போல, யாழ். குடாநாட்டிலிருந்து அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள மற்றொரு பகுதிக்குச் செல்வதற்கு இறுக்கமான விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதும் -

யாழ். குடாநாடு, இலங்கை தேசத்திலிருந்து வேறுபட்ட நாடு என்ற சிந்தனைப் போக்கையே உணர்வு ரீதியாகத் தருகின்றது.

இந்த வகையில் இலங்கையிலிருந்து தாம் வேறு தேசத்தவரா என்ற கேள்வியை தமிழர் மனதில்எழுப்பும் என்று கொள்ளலாம்.

## புனர்நிர்மாண, அத்தியாவசிய கட்டடப் பணிகளுக்கு மணல் பெறுவது குறித்து அரச அதிபரின் அறிவுறுத்தல்கள்

யாழ்ப்பாணம், செப்.3

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாண மற்றும் அத்தியாவசிய கட்டடப் பணிகளுக்கு குடத்தனையிலிருந்து மணல் பெறுவதற்கான அனுமதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளல் தொடர்பான அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பொதுமக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு இந்த அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் செயற்படும் மணல் உத்தரவுப் பத்திரம் வழங்கும் பிரிவில் மணல் உத்தரவுப் பத்திரம் வழங்கலுக்கான விண்ணப்பங்கள், கொடுப்பனவுகள் அரச திணைக்கள வேலை நாள்களில் முற்பகல் 10.30 மணி வரையும் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

தற்போது கட்டுமானப் பணிகளுக்கான மணலின் தேவை அதிக மாக இருப்பதனாலும், மட்டுப்ப டுத்தப்பட்ட அளவு மணலேகுடத் தனையிலிருந்து பெறக்கூடியதாக இருப்பதனாலும் பின்வரும் முன்னு ரிமை அடிப்படையில் பயனாளிக ளுக்கு மணல் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

*அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் நிதியில் மேற்கொள்ளப்படும் வீட்டுத்திட்டங்கள்

*அரச திணைக்கள மற்றும் பொதுக் கட்டுமானப் பணிகள்

*தனியார் அத்தியாவசிய நிர்மாண வேலைகள்

மணல் உத்தரவுப் பத்திரத்திற்கான விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிகளினால் தெளிவாகவும், பூரணமாகவும் பூர்த்தி செய்யப்பட்டு விண்ணப்பதாரியினாலேயே விண்ணப்பம் ஒப்பமிடப்பட்டு சம்பந்தப்பட்ட கிராம அலுவலர், பிரதேச செயலர், உதவி அரசாங்க அதிபர்க ளின் சிபாரிசுடன் விண்ணப்பதாரிகளினால் நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் விண்ணப்பதாரிகளின் இயலாமையை எழுத்து மூலம் தெரிவித்து அப்பகுதி கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப்பட்டு முகவர் மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படலாம்.

அரச திணைக்களப் பணிகளுக்கான விண் ணப்பங்கள் சம்பந்த ப்பட்ட தொழில் நுட்ப திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட வேண்டும்.

ஏற்கனவே பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தரவுப் பத்திரத்தில் மாற்றங்கள் (வாகன இலக்கம், சாரதி பெயர், திகதி நீடித்தல் போன்றவை) செய்ய வேண்டியிருப்பின் தேவைப்படும் மாற்றங்களுக்கான எழுத்து மூலக் கோரிக்கை சம்பந்தப்பட்ட பிரதேச செயலர், உதவி அரசாங்க அதிபரினால் சிபாரிசு செய்யப்பட வேண்டும். அவ்வாறிலலாதவிடத்து அவர்களது கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இம்மாற்றங்கள் முற்பகல் 11.30 மணிக்குப் பின்னரே சம்பந்தப்பட்ட கிளையினரால் செய்து கொள்ளப்படும்.

மணல் விநியோக அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக்காலம் ஒரு மாத காலப்பகுதிக்கே வழங்கப்படுவதனால் சம்பந்தப்பட்ட பயனாளிகள் லொறி உரிமையாளர்கள், சாரதிகளை தொடர்பு கொண்டு அனுமதிக்கப் பட்ட கால எல்லைக்குள் அனுமதிக் கப் பட்ட மணல் அளவை தவறாது பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத் தல் வேண்டும்.

லொறி உரிமையாளர்களும், சாரதிகளும் அனுமதிக்கப்பட்ட காலஎல்லைக்குள் மணல் விநி யோகித்து விட வேண்டும். தாமதங் க்ள் ஏற்படுத் தப்படின் எதிர்காலத்தில் அவர்களுக் குரிய அனுமதிப்பத்திர விண்ணப் பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுஅளவு மணலும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் குறிப்பிட்ட அனுமதிப்பத்திர பயனாளி முழு மணலும் பெற்றுக் கொள்ளப்பட்டதாக அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்டு குறித்த அனுமதிப் பத்திரத்தை கிராம சேவையாளர் ஊடாக அல்லது நேடியாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலருக்கு, உதவி அரசாங்க அதிபருக்கு தவறாது சமர்ப்பித்தல் வேண்டும்.

பின்வரும் அட்டவணைப்படியே பயனாளிகளிடமிருந்து மணல் அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளப்படும்.

திங்கள்:- யாழ்ப்பாணம், சங் கானை, காரைநகர், ஊர்காவற்றுறை பிரதேச செயலர்/உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்.

செவ்வாய்:- தெல்லிப்பழை, உடுவில், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகள்.

புதன்:- கோப்பாய், வேலணை பிரதேச செயலர் பிரிவ்கள்.

வியாழன்:- சாவகச்சேரி, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகள்.

வெள்ளி:- பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகள். (202)

## பருத்தித்துறை வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்கானமருந்து தட்டுப்பாடு

வடமராட்சி,செப்.3

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நீரிழிவு நோய்க்கான மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் நீரிழிவு கிளினிக்கிற்குச் சென்ற நோயாளர்களுக்கு வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு உள்ளதாகவும் தனியார் மருந் தகங்களில் வாங்குமாறும் அறிவு றுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (202-236)

## பொலிகண்டி கிழக்கில் பொது மண்டபத் திறப்புவிழா

வடமராட்சி,செப்.3

பொலிகண்டி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க பொதுமண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தின்ராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

இந்நிகழ்வில் யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, நிகொட் நிறுவன யாழ்.மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.சிவரூபன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (202-236)

## சேமிப்பு வங்கி ஆள் சேர்ப்புப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.03

கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் முகாமைத்துவ பயிலுநர் ஆள்சேர்ப்புப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்துமாறு யாழ்ப்பாண வங்கியாளர் சங்கத்தின் தலைவர் என். சிவரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய சேமிப்பு வங்கிக்கு முகாமைத்துவ பயிலுனர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு லும்பினி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் கொழும்பு செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. கொழும்பு செல்வதற்கான பயண அனுமதி, கொழும்பில் தங்கியிருக்கும் வேளையில் பாதுகாப்பு, பயணச் செலவு ஆகியவற்றால் அவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்தப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்தி இங்குள்ள பரீட்சார்த்திகள் எந்தவித சிக்கலும் இன்றிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென யாழ்ப்பாண வங்கியாளர் சங்கத்தின் தலைவர் என்.சிவரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (50)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

கரவெட்டி,செப்.03

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தப்படும் ஆன்மீக நிகழ்வுகளின் வரிசையில் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு 'நானும் தானும்' என்னும் தலைப்பில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (70-236)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 19 | 04.09.2008 வியாழக்கிழமை |
| திதி: | பஞ்சமி பி.இ. 3.21வரை |
| நட்சத்திரம் : | சுவாதி முழுவதும் |
| சுபநேரம் | : 07.35 - 09.05 |
| ராகுகாலம் | : 01.35 - 03.05 |

## சர்வதேச சிறுவர் தினத்தை சிறப்புற நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.3

சர்வதேச சிறுவர் தினத்தினை இவ்வருடமும் சிறப்பாக பிரதேச மட்டத்தில் அனுஷ்டிக்க மாகாண சமூக நலத்துறை திணைக்களத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி 'பிள்ளைகளுக்கு செவி சாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியாக்குவோம்' என்னும் கருப்பொருளை மையமாகக் கொண்டு சிறுவர் உரிமைகள், அவற்றினைப் பாதுகாத்தல் என்பனவற்றை பிரதிபலிக்கும் வகையிலும், சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படவுள்ளன.

சம்பந்தப்பட்ட நிறு த் தலைவர்களுக்கு மாகாண சமூக நலத் துறைத் திணைக்கள ஆணையாளர் ஜே.எஸ். அருள்ராஜ் இது தொடர்பான அறிவுறுத் தலை விடுத்துள்ளார். (202-207)

## சமூக வலுவூட்டல் அலுவலர் பதவிக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம், செப்.03

வடக்கு மாகாணத்தில் நிகழ்ச்சித் திட்ட அலுவலர்களாக கடமையாற்றுபவர்களில் இருந்து சமூக வலுவூட்டல் அலுவலர்கள் பதவிக்கு ஆள் சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் இ. இரவீந்திரன் சகல திணைக்கள மற்றும் அமைச்சு அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மீள் எழுச்சி திட்ட மாவட்ட காரியாலயங்களில் சமூக வலுவூட்டாளர் அல்லது ஆற்றுப்படுத்தல் அலுவலர்கள் விரைவில் மேற்படி மாவட்டங்களில் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

திணைக்களங்கள், அமைச்சுகளில் கடமையாற்றும் நிகழ்ச்சித்திட்ட அலுவலர்கள் மேற்படி பதவிக்கு திணைக்கள தலைவர் ஊடாக விண்ணப்பங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பங்களை 'பிரதி திட்டப் பணிப்பாளர், மீள் எழுச்சித் திட்டம், வவுனியா' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

பொருத்தமானவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களுக்கும் நியமிக்கப்படுவர்-என்றுள்ளது.(202-95-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்....



வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் சங்கானை, சண்டிலிப்பாய், காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள புற்றுநோயாளர்களுக்கு அண்மையில் அன்பளிப்புப் பொருள்களை வழங்கியது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பயனாளி ஒருவருக்கு அன்பளிப்புப் பொருள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.



பண்டத்தரிப்பு வடலியடைப்பு கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

முன்பள்ளிச் சிறார்களின் உடற்பயிற்சி நிகழ்வை மேலே காணலாம். (288)



கரவெட்டிப் பிரதேச அபிவிருத்தி ஒன்றியம் கரவெட்டி கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் பார்வை குறைந்த மாணவர்கள் 149 பேருக்குக் கண்களைப் பரிசோதித்து இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கியது. கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் மாணவர் ஒருவருக்கு கண்ணாடி அணிவிப்பதையும் நடுவே கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன் நிற்பதையும், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி வி. அம்பலவாணர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:கர்ணன்)



கோபதியின் சிறுகதைகள் நூலை யாழ்.இலக்கிய வட்டம் அண்மையில் வெளியிட்டு வைத்தது. முதல் பிரதியை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் நூலாசிரியருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.



திருநெல்வேலி லயன்ஸ் கழகத்தின் 2008-2009 ஆண்டுக்கான புதிய அங்கத்தவர் பதவி யேற்பு வைபவத்தில் கலாநிதி லயன் குணராசா புதிய அங்கத்தவர்களுக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைப்பதைப் படத்தில் காணலாம். திருநெல்வேலி லயன்ஸ் [illegible] பிரதிச் செயலாளர் லயன்ஸ் எஸ். சிவராஜேஸ்வரன், மாவட்ட இணைப்பாளர் லயன் டாக்டர் வி. தியாகராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)



வலி.கிழக்குப் பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் இடம்பெற்ற கரகாட்ட நிகழ்வைப் படத்தில் காணலாம். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*



யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தினால் பூவற்கரை கிராமத்துக்கு வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மைய இணைப்பாளர் ந. சுகிர்தராஜ் உரையாற்றிக் கொண்டிருப்பதையும் அருகில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ. வரதீஸ்வரன், கிறிஸ்தவ நிறுவன திட்ட அலுவலர் தர்சினி மகேந்திரன் மற்றும் உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: நவாலி செய்தியாளர்)



இயேசு சபை அகதிகள் பணியகத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அருட்தந்தை ஸ்ரனிஸ்லாஸ் அடிகளார் வலிகாமம் கல்விப் பிரிவினரால் அண்மையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். பாராட்டு விழா நிகழ்வில் இளவாலை றோ.க.த.க.ஆண்கள் பாடசாலை அதிபர் ம.அன்ரனி சாந்தா விழா நாயகனுக்கு வாழ்த்துமடல் வழங்குகின்றார்.



ஊரெழு கணேசா வித்தியாசாலைக்கு நுழைவாயில் பெயர்ப்பலகையை பாடசாலையின் உப அதிபர் திருமதி லோ.இரகுநாதன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். உப அதிபருக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (72)



துன்னாலை தெற்கு கலிகைக் கந்தன் கலாசார மண்டபத்தில் சாந்திகம் அமைப்பு, சிறுவர் பாதுகாப்பு நிறுவனங்களின் அனுசரணையில் துன்னாலை தெற்கு சிறுவர் வட்டம் நிகழ்த்திய சிறுவர்களின் கலைகளின் சங்கம நிகழ்வில் இடம்பெற்ற கலைநிகழ்ச்சி ஒன்றினைப் படத்தில் காணலாம். (236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் 10 கலைஞர்கள் ஆளுநர் விருதுகளுக்கு தெரிவாகியுள்ளனர்

திருகோணமலை, செப். 03

வடக்கு மாகாண சபையின் பண்பாட்டுத் திணைக்களத்தினால் 10 கலைஞர்கள் ஆளுனர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே தெரிவாகியுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக வருமாறு:-

- நாட்டுக்கூத்து - கே.நாகப்பு - சங் கானை
- சித்திரம் - வி.சிவசுப்பிரமணியம் - தெல்லிப்பழை
- சங்கீதம் - ஆர்.சுந்தரமூர்த்தி - யாழ்ப்பாணம்.
- இலக்கியம் - கே.நடேசு (தெணியான்) - கரவெட்டி
- சங்கீதம் - எஸ்.நடராசா - கிளிநொச்சி
- சங்கீதம் - எல்.திலகநாயகம்போல் - உடுவில்
- குழந்தை இலக்கியம் - பி.அன்ரனிப் பிள்ளை - மன்னார்
- சிற்பம் - ஐ.கெங்காதர ஆச்சாரி - யாழ்ப்பாணம்.
- சித்திரம் - ஆர்.இராசையா - நல்லூர்
- மொழியியல் - திருமதி எஸ்.மனோண் மணி - நல்லூர். (அ-1-151)

# தே.சே. வங்கி பரீட்சார்த்திகள் கொழும்பு செல்ல உதவுமாறு படைத் தளபதியிடம் கோரிக்கை

கொழும்பு, செப். 03

எதிர்வரும் 7ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்கு யாழ்ப்பாண விண்ணப்பதாரிகள் தோற்ற வசதியாக அவர்களுக்கு பாதுகாப்பு அனுமதியை வழங்கி உதவுமாறு தேசிய சேமிப்பு வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் ரி.எம்.கே.பண்டார கோரியுள்ளார்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.எ.சந்திரசிறிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய சேமிப்பு வங்கியின் முகாமைத்துவப் பயிலுனர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து தோற்றுபவர்கள் பாதுகாப்பு அனுமதி பெறுவதில் சிக்கல்களை எதிர்நோக்குவதால் பரீட்சைக்கு சமூகமளிக்க முடியாத நிலை உள்ளதாக அறிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட பரீட்சைக்கு 2700 பேர் நாடு முழுவதிலும் இருந்து தோற்றுவதால் அதனைப் பிற்போடவும் முடியாது.

எனவே தோற்றவிருக்கும் யாழ் பரீட்சார்த்திகளுக்கு பாதுகாப்பு அனுமதி வழங்கி உதவ வேண்டும் - என்றுள்ளது. (அ-1)

# யாழ்.ஆஸ்பத்திரிச் சிற்றுண்டிச்சாலையில் பாவனைக்கு ஒவ்வாத உணவுப் பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செப் 03

யாழ்.போதனா ஆஸ்பத்தரியில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையில் பாவனைக்கு ஒவ்வாத உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.

போதனா வைத்திய சாலை பொதுச் சுகாதார பரிசோதகர் சி.முரளிதரன் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது அவை மீட்கப்பட்டுள்ளன.

கடலை வடைகள், வடைகள் தயாரிக்க வைத்திருந்த அரைத்த கடலைப்பருப்பு ஆகியனவே அவரால் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் மற்றும் நோயாளர்கள் இந்தச் சிற்றுண்டிச் சாலையிலேயே உணவுப் பொருள்களை கொள்வனவு செய்வது தெரிந்ததே. (அ-1-38-149)

# முள்ளுக்கம்பியால் கட்டப்பட்ட சடலம் மண்கும்பானில் கரை ஒதுங்கியது

யாழ்ப்பாணம், செப் 03

கையும், காலும் முள்ளுக்கம்பியால் கட்டப்பட்ட நிலையில் ஆணின் சடலம் ஒன்று சிதைந்த நிலையில் மண்கும்பான் கடற்கரையில் ஒதுங்கியுள்ளது.

நேற்று முற்பகல் 10.30மணியளவில் கரை ஒதுங்கிய சடலத்தை ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் நேற்றுப் பிற்பகல் பார்வையிட்டு, விசாரணை நடத்தினார்.

கறுப்புநிற நீளக்காற்சட்டை அணிந்திருந்த சடலம் அடையாளம் காணமுடியாத நிலையில், துர்நாற்றம் வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை அடையாளம் காண்பதற்காக யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-01-78)

# பீகாரில் வெள்ள நிவாரணப் பணிகளில் இராணுவத்தினர்; நேற்றுமுன்தினம் வரை 120 பேர் பலி; 5 லட்சம் பேர் மீட்பு

பாட்னா, செப். 03

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பீகார் மாநிலத்தில் இராணுவத்தினர் நிவாரணப் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். 6 ஹெலிக்கொப்டர்கள், ஏராளமான படகுகள் ஆகியவற்றுடன் 4 ஆயிரத்து 500 இராணுவத்தினர் இந்த நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அங்கு வெள்ளத்தில் சிக்கியவர்களில் இதுவரை 5 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் மீட்கப்பட்டு முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் வரை வெள்ளத்தில் சிக்கியும், வீடுகள் இடிந்தும், மற்றும் மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு 120 பேர் வரை பலியாகியுள்ளனர்.

பீகார் மாநிலத்தில் கடந்த 10 நாள்களுக்கும் மேலாகப் பெய்த பலத்த மழை காரணமாக ஏரி, குளங்கள் நிரம்பி வழிகின்றன. ஆறுகளில் வெள்ளம் பெருக் கெடுத்து ஓடுகிறது.

பல ஆயிரக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நூற்றுக்கணக்கான வீடுகள் இந்த வெள்ளத்தில் இடிந்துவிழுந்துள்ளன. 20 லட்சம் பேர் வீடுகளை இழந்ததுடன், வெள்ளத்தில் சிக்கித் தவிக்கின்றார்கள்.

பஸ், ரயில் போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. பால், காய்கறி, உணவு கிடைக்காமல் பொதுமக்கள் திண்டாடி வருகிறார்கள்.

மீட்புப் பணிகளுக்காக 28 ஆயிரம் மாநிலப் பொலிஸார் மற்றும் தீயணைப்புத் துறை வீரர்களுடன் இராணுவமும் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. நேற்றுமுன்தினம் வரை மொத்தம் 4 ஆயிரத்து 500 இராணுவ வீரர்களை மத்திய அரசு மீட்புப் பணிக்காக பீகாருக்கு அனுப்பிவைத்துள்ளது.

# அரச - எதிரணி ஆதரவாளர்கள் மோதலால் தாய்லாந்தில் அவசரகால நிலை பிரகடனம்



பாங்கொக், செப்.03

தாய்லாந்தில் அரசுக்கு எதிரான கோஷ்டிக்கும், ஆதரவான கோஷ்டிக்குமிடையே மூண்டுவரும் மோதல்களையொட்டி, பிரதமர் சமாக் சுந்தரவெஜ் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார். தலைநகரான பாங்கொக்கில், செவ்வாய்க் கிழமை, எதிரும் புதிருமான இக்கோஷ்டிகளுக்கிடையே மூண்ட மோதலில் டசின் கணக்கானோர் காயமடைந்தனர் என ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமரை பதவி விலகுமாறு கோரி ஜனநாயகத்துக்கான மக்கள் கூட்டமைப்பினர் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். நாடாளுமன்ற கட்டடத்துக்கு முன்னால் இவர்கள் திரண்டிருக்கிறார்கள். பிரதமரின் வாசஸ்தல வளவும் இவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. கலைந்து செல்வதற்கு அரசால் விடுக்கப்பட்ட காலக் கெடுவையும் ஆரப்பாட்டக்காரர்கள் உதாசீனப்படுத்தி விட்டார்கள் என ஓர் அரசாங்க அதிகாரி தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டட வளவில் குழுமியிருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரால் சுற்றி வளைக்கப் பட்டுள்ளார்கள். அரச கட்டடங்களுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. செவ்வாய்க் கிழமை காலை, பிரதமருக்கு ஆதரவான கோஷ்டியினர், பொலிஸ் தடைகளை நீக்கிக் கொண்டு, எதிர்க்கோஷ்டியினரை நோக்கி, ஆவேசத்துடன் முன்னேறினார்கள். பொலிஸாரின் எச்சரிக்கையையும் அலட்சியப்படுத்தி விட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்தே, எதிரும் புதிருமான இவ்விரு கோஷ்டிகளுக்குமிடையே மோதல்கள் மூண்டன. பொலிஸாராலும், கலகம் அடக்கும் பொலிஸாராலும் மோதல் ஒடுக்கப்பட்டது. (ஓ)

# இலங்கைக்கு கடத்துவோரை தேடி வலைவீச்சு

இராமநாதபுரம், செப்.03

இலங்கைக்குப் பொருள்கள் கடத்தும் தொழிலில் ஈடுபட்ட பழைய குற்றவாளிகளைக் கியூப் பிரிவுப் பொலிஸார் தேடுவதை அறிந்த முக்கிய முகவர்கள் வெளியூர்களுக்குத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு தமிழகத்திலிருந்து முன்பு அதிகளவில் பொருள்கள் கடத்தப்பட்டன. விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த முக்கிய நபர்கள் தமிழகத்தில் முகாமிட்டுப் பல்வேறு இடங்களில் பொருள்களை வாங்கி இங்குள்ள முகவர்கள் மூலம் கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கடத்திவந்தனர். கடந்த மாதத்தில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய நபர் தம்பியண்ணா சென்னையில் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தற்காலிகமாகக் கடத்தல் நிறுத்தப்பட்டது.

இதையறிந்த இராமநாதபுரம் கியூப் பிரிவுப் பொலிஸார் தங்களது புலனாய்வுகள் மூலம் எந்த வழியாகக் கடத்தவிருக்கிறார்கள் என்பதை அறிந்து தலைமைக்குத் தகவல் அனுப்பியுள்ளனர்.

# சர்தாரி உளநலம் பாதிக்கப்பட்டவர் அமெரிக்க அதிகாரிகள் கவலை



நியூயோர்க், செப், 03

பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் இணைத் தலைவர் சர்தாரி உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர். அத்துடன் அதற்கான மருத்துவ பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டவர் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

சர்தாரி கடந்த ஆண்டு, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அப்போது அவருக்கு உளவியல் ரீதியாக பிரச்சினைகள் உள்ளமை தெரியவந்தது. அதனால் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டார் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இது தொடர்பாக, சர்தாரியின் உதவியாளர்கள் கருத்து வெளியிடுகையில், ''அவர் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். அதனால் முழுமையாகக் குணமடைந்தார். இன்று அவருக்கு எந்த உபத்திரவமும் இல்லை'' எனத் தெரிவித்துள்ளார்கள்.

லண்டன் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் ஊழல் தொடர்பான வழக்கொன்றில் சர்தாரி ஆஜராக வேண்டியவர். ஒருமுறை விசாரணையின் போது அவரது வழக்கறிஞர்கள், சர்தாரி சாட்சியம் அளிக்க முடியாத அளவுக்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்கள். அதற்கான ஆவணங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்கள் என்றும் அமெரிக்க அதிகாரிகள் இத்தருணத்தில் சுட்டிக்காட்டி யுள்ளார்கள்.

மனநலன் குறைபாடு உள்ளவர் கையில் ஆபத்தான ஆயுதம் இருப்பது உலக அமைதிக்கு ஓர் அச்சுறுத்தலாகவே இருக்கும். சர்தாரி பாகிஸ்தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், அந்நாட்டு அணுவாயுதங்கள் அவரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கும். இது ஒரு வரவேற்கத்தக்க செயலாகாது என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

எமது நிறுவனத்திற்கு விற்பனைக்கு வந்துவிட்டது

யாழ்.மாவட்ட விவசாயிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு (N.G.O) உகந்த குறுகிய நேரத்தில் இலகுவில் இயக்கக் கூடிய

★ இயந்திர தெளிகருவி (Power Sprayer)
மொத்தவிலை 28500/=

★ நெற்கதிர் மற்றும் புல் வெட்டும் சாதனம் (Brush cutter)
மொத்த விலை 25500/=

தில்லையம்பதி மோட்டோர்ஸ்
இல. 236 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

ப்பு ரெக்ஸ்வரல்ஸ்

நவீனரக பஞ்சாபி, சாறி, சிறுவர்களுக்கான பஞ்சாபி, ஸ்கேட் அன் பிளவுஸ் சகல விதமான ரெடிமெட் ஆடைகள் என்பன விற்பனைக்குண்டு.

இல.50, கம்பஸ்லேன்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### பொன்னப்பா கனகசபை

புலோப்பளையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்ட பொன்னப்பா கனகசபை 01.09.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னப்பா வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், பரிமளத்தின் அன்புக் கணவரும், பூபாலசிங்கம் (முறிவு நெறிவு வைத்தியர் வவுனியா), குணபாலசிங்கம் (அதிபர், கிளி, பளை மத்திய கல்லூரி), திருமதி சண்முகலிங்கம் திலகவதி (ஆசிரியை, யா/திருநெல்வேலி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை), தனபாலசிங்கம் (உதவி ஆணையாளர் பிரதேச சபை கிளிநொச்சி), யோகநாதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், தேச நிர்மாண தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு), சித்திராங்கதன் (லண்டன்)ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், புஸ்பம், சசிகலா, சண்முகலிங்கம் (முன்னாள் கணக்காளர், பூநகரி, நல்லூர் ப.நோ.கூ.சங்கம், கணக்காய்வாளர்), மதிவதனி, ஜெயரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சரவணமுத்து, தம்பிராசா, சிவக்கொழுந்து, சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், மயூரி, கேசவன், நிதர்சனா, குகபாலன், மதூசன் லக்ஷன் , அபிசரன், தர்மிலன், சங்கவி, குகபாலன், நரேன், கிசாளினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

இல: 36, மேட்டுத் தெரு,
தோணிக்கல், வவுனியா.
T.P. 0242220439,0242220471

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நகர சபை, யாழ்ப்பாணம்.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது - 32) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் அவர் மீது 5 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## நாச்சிக்குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம் முன்நகர்வுக்கு எதிரான தாக்குதலை செவ்வாய் அதிகாலை 2 மணிவரை விடுதலைப்புலிகள் நடத்தினர்.

விடுதலைப்புலிகள் நடத்திய தீவிர முறியடிப்புத் தாக்குதலையடுத்து, படையினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கினர்.

இதில் 34 படையினர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான படையினர் காயமடைந்தனர். படையினரின் 7 சடலங்களையும் படையப் பொருள்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

களமுனையில் மேலும் பல படையினரின் உடலங்கள் சிதறிக்கிடப்பதாக களமுனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### படைத்தரப்பிலிருந்து

நேற்று முன்தினம் தாக்குதல் படையினர் முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்டபோது விடுதலைப்புலிகள் பெரும் எடுப்பில் எதிர்த் தாக்குதலை நடத்தினர். படையினர் அந்தத் தாக்குதலை முறியடித்து அவர்களுக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தினர்.

இந்த மோதலில் 44 புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனர். நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். மூன்று படையினர் கொல்லப்பட்டனர்: 18 படையினர் காயமடைந்தனர் - என்று ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (அ-1)

## இலங்கைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய தினம் காலை 8 மணிமுதல் மாலை 6மணிவரை மெல்போர்ன், தென் வென்ரினாவிலுள்ள சென் போல்ஸ் மிஷன்ரியில் (St Paul's Missionary College) இவ் ஆராதனைகளும் பிரார்த்தனைகளும் இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுத்துறையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நுவரேலியா நாஓயாவைச் சேர்ந்த கே.சந்திரமோகன் (வயது 24) என்பவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர் பொலிஸ் சாரதியாகக் களுத்துறை பொலிஸ் பயிற்சி பாடசாலையில் ஒருமாத காலமாக பயிற்சி பெற்றவர் என்றும், அவர் களுத்துறையில் நடைபெற்ற நேர்முகத் தேர்வின்போது உரிய அத்தாட்சிப்படுத்தல்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## போலி விசாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

30 முதல் 35 வயதிற்குட்பட்ட இலங்கையர்களை அந்த நாட்டின் தேசியப் புலனாய்வு அமைப்பின் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

பப்புவா நியூகினியாவின் மேற்கு பிராந்தியத்தின் எல்லையூடாக அவுஸ்திரேலியாவிற்குள் செல்வதற்கு இலங்கையர்கள் முயற்சி செய்தனர் என்றும், இந்த வாரமே இவர்கள் போலி விசாவைப் பயன்படுத்தி இலங்கையிலிருந்து அங்கு வந்திருந்தனர் என்றும் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மல்லாவி அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் மல்லாவிக்குள் நுழைந்து விட்டனர். அதாவது விடுதலைப்புலிகளின் இதயபூமியின் எல்லையை எட்டிவிட் டனர். இனி வரும் சில வாரங்களில் எல்லை களுக்கு அப்பாலும் இப்பாலும் படையினரும் விடுதலைப்புலிகளும் எவ்வாறு முன்னேறி நகர்வது என்பது அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் - இரண்டு தரப்புகளுக்குமே - பிரச்சினைக்குரிய கடும் கேள்விக்குறியாக, கடும் சோதனையாக- இருக்கப் போகிறது - என்றும் அத்தாஸ் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை-

அரச படைகளின் இப்போதைய முன்னேற்றம் விடுதலைப்புலிகளை முற்றுகையிட்டு, இந்த வருட இறுதியில் அவர் களை ஒடுக்கி விடுவது என்ற அரசாங்கத்தின் உத்திக்கு வலுச்சேர்ப்பதாக அமையக் கூடும் என்று ரொய்ட்டர்ஸ் செய்தியாளர் பிறைசன் ஹல் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

## கருணா குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெருவைச் சேர்ந்த வைரமுத்து பரமநாதன் (வயது - 40) என்பவரே இவ்வாறு சுட் டுக் கொல்லப்பட்டவராவார்.

அன்றைய தினம் மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் - காயமடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் - அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தை அடுத்து திருகோவில், அக்கரைப்பற்று மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளில் நேற்றைய தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது அரச திணைக்களங்கள், வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுக் கிடந்தன. போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதனால், அப்பகுதியில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. (அ-சி)

## காணாமற்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவி குறித்து நேற்றுவரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றுபெற்றோர் தெரிவித்தனர்.

சிதைந்த நிலையில் துர்நாற்றம் வீசிய நிலையில் மீட்கப்பட்ட சடலம் யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று மாலை நெல்லியடிப் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-1-78)

## பொத்துவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்த இருவரும் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார்கள் என்று படைத்தரப்பில் கூறப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பெருமளவு விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை-

கஞ்சிகுடிச்சாறு பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறிவெடியில் சிக்கி சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஐந்துபேர் காயமடைந்துள்ளனர்.

கஞ்சிகுடிச்சாறு வனப்பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகலும், மாலையும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட சிறப்பு அதிரடிப் படையினர் மீதே புலிகள் பொறிவெடித் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்பட்டது.

## பத்திரிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடேசு கிருஸ்ணகுமார் (வயது - 27) என்பவரே கடத்தப்பட்டிருக்கின்றார். வழமைபோல கடையில் வேலை செய்துகொண்டிருந்த இந்த இளைஞன் பக்கத்தில் உள்ள ஒரு கடைக்குச் சென்றுவருவதாகக் கூறிவிட்டு, சென்றார் என வும், அதன் பின்னர் அவர் வீடு திரும்ப வில்லை என்றும் அவரின் தந்தையார் வவுனியா பொலிஸ்நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

## வன்னி மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகவர் அமைப்புக்கள் ஊடாக அனுப்பவும் ஐ.நா. கவனம் செலுத்தவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித் துள்ள கருத்துத் தொடர்பாக மாவை மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

இராணுவ நடவடிக்கை காரணமாக இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக் கள் வன்னியில் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களுக்குத் தேவையான அத்தியா வசிய உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் எதுவும் அங்கு இல்லை. ஆனால், தேவையானவற்றை அரசாங்கம் அனுப்புவதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறுவது உண்மைக்கு மாறானது. அவர் கூறுவதை ஏற்க முடியாது.

எமது நாடாளுமன்றக் குழு கொழும்பிலுள்ளஐ.நா. சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய பணிப்பாளரை சந்தித்து மக்களின் பாதுனகாப்பு விடயத்தில் கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கவுள்ளோம். அத்துடன் மக்களுக்குத் தேவையான உடனடி நிவாரணப் பொருள்களை அனுப்பும் விடயத்திலும் கவனம் செலுத்தி நேரடி கண்காணிப்பில் ஈடுபடுமாறும் கோரவுள்ளோம் - என்றார். (அ-1)

## வெளிநாட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர்களுடன் சந்திப்புக்களை நடத்தியுள்ளார் என அவரது ஊடகப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்புக்கள் இந்தியத் தூதுவர் அலேக் பிரசாத், ஆஸ்திரேலியத் தூதுவர் கதி குழுக்மன், துணைத் தூதுவர் சோபியா மக்லின்டயர், நோர்வே தூதுவர் டோர் ஹெட்ரம், ஜேர்மனியத் தூதுவர் ஜூவர்கன் வீர்த், துணைத் தூதுவர் ஸ்டீபன் வெக்பெக், ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் பீட்டர் மஹேர் ஆகியோருடன் இடம்பெற்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மல்லாவி நகரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றது. எனினும் பலத்த எதிர்ப்பின் மத்தியிலும் இராணுவத்தினர் முன்னேறிச் சென்று மல்லாவி நகரம் முழுவதையும் தம்வசம் ஆக்கினர்- என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இடங்களைக் கைப்பற்றிச் சென்ற அதே வேளை கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து பல பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் இராணுவம் மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக நடைபெற்ற கடும் சமர்களின் பின்னர் விடுதலைப்புலிகளின் முக்கிய கோட்டைகளில் ஒன்றான மல்லாவியை 57 ஆவது டிவிசன் கைப்பற்றியது- என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தது. (அ)


**Ram Communication**

மிகக் குறைந்த கட்டணங்கள் Inter net Brousing மற்றும் வாடிக்கையாளரின் தேவை கருதி முகம் பார்த்து க..நப்பதற்கு நிமிடத்திற்கு 10/= உம் மற்றும் IDD E.mail, Computer, Fax Internet call, Typing, Scanning, Photo Copy, Laminating மற்றும் உள்ந... வெளிநாட்டு கடிதங்கள், CD, VCD உலர் உணவு பொருள்கள் போ...வற்றை குறைந்த கட்டணங்களில் அனுப்பிக்கொடுக்கப்படும்.

இதர தேவைகளுக்கு Ram Communication இனை நாடவும்

Tel. 021 222 8428
Fax. 021 222 2007
E.mail - n.Ram Com@hotmail.com

No.6A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**அட்சயா**

மகளிருக்கு ஓர் அரிய வாய்ப்பு

தவணைக் கட்டணத்தில்

அர்விந் ஸ்ரூடியோவிற்கு அருகில்

மகளிருக்கு ஓர் பொன்னான வாய்ப்பு!

★ வீட்டில் இருந்தபடியே பணம் சம்பாதிக்க ஆசையா?
★ அல்லது படித்தபடியே பணம் சம்பாதிக்க ஆசையா?

கவலையே வேண்டாம் நீங்கள் செய்ய வேண்டியது,

Facial, Bridial make up, Hair Style, Preming (தலைமுடி சுருட்டுதல்) Straigh tening (தலைமுடி அயன் பண்ணுதல்)Cake Icing (30 விதமான Icing பூக்கள்) பெயின்டிங் (4 விதமான சாறி வேக்) கைவேலை அழகிய பொம்மை செய்தல், டெலிரியர் நாய்க்குட்டி செய்தல், பூவேலை (அழகிய ரோஜா பூச்செண்டு அமைத்தல்)

மேற்கூறிய கற்கை நெறிகளை பயின்று கை நிறைய சம்பாதியுங்கள்

மேலதிக விவரங்களுக்கு நேரில்

பயிற்சி ஆரம்பம்: 06.09.2008

அட்சயா
461, நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்

**தொழிற் பயிற்சிகள்**

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புப் பெறக்கூடிய முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சிகளுடன் பயிற்சியளிக்கப்படும்.

★ **Mobile Phone Repairing**
Hard Ware — Hard Ware Repairing
Soft Ware — Phone Lock — காலம்:- 2 மாதங்கள்

★ **Diploma in Hard Ware Engineering**
காலம்:- 5 மாதங்கள்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் றிப்பெயறிங்
சகல இன றேடியோக்கள், ரெலிவிசன், வீடியோடெக், CD, Amp திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்
காலம்:- 9 மாதங்கள்

★ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 6 மாதங்கள்

★ எலக்ரிக்கல் வயறிங், றிவைண்டிங், வீட்டு மின் வேலை, மோட்டார், Fan,Transformer வைண்டிங் செய்யப்படும் முறை பயிற்சியளிக்கப்படும்
காலம்:- 6 மாதங்கள்

ஆரம்பம்:- 06.09.2008 (சனி)
05.09.2008 (வெள்ளி)

**JAFFNA TECHNICAL INSTITUTE**

இல. 45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0212226434.
கிளை:- NEW ASIAN CENTER (வர்த்தக வங்கி முன்பாக)
No. 56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**ENGLISH** (புதிய பிரிவு)

SPOKEN WITH GRAMMAR
By - **BRITTO**

புதன்/வெள்ளி வகுப்புகள்-
ஆரம்பம்:- 05-09-2008 (புதன்)
இடம்:- கொக்குவில்
(ஞானபண்டிதர் பாடசாலை அருகில்)
நேரம்:- காலை 8.30.

**A/L DAY CLASS**

கணித உயிரியல் பிரிவுகள்

ஆரம்பம்: 05.09.2008 வெள்ளி மாலை 3 மணி

| | |
|---|---|
| பௌதிகவியல் K.செல்வன் (Mon, Wed, Fri 5.30-6.30) | இரசாயனவியல் S.Vasu (Mon, Wed, Fri 4.30-5.30) |
| இணை கணிதம் S.யூட் (Mon, Wed, Fri 3.00-4.00) | உயிரியல் V.A.ஞானேந்திரன் (Mon, Wed, Fri 3.00-4.00) |

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**SPECIAL ENGLISH**

* முழுமையான கற்கை நெறி
* A Total Immersion Course
* for 'A' Level, Technical & University Students, Teachers and the Employed

ஆரம்பம் 06.09.2008 காலை 10.00 மணி

வார இறுதி வகுப்புக்கள்

ஆசிரியர்
த.ந.பஞ்சாட்சரம்

விபரங்கள்: **New Science Hall**
கன்னாதிட்டி


## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா நடராசா

கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில், கொக்குவில் கிழக்கு, கோணாவளை வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா நடராசா நேற்று (02.09.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் நாகமுத்து நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் மகளும், நாகமுத்து - தங்கத்தின் மருமகளும், கணேசபிள்ளை, காலஞ்சென்ற நடேசபிள்ளை, சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், சறோஜினிதேவி (ரதி), யோகராசா, குலமணிதேவி (கிளி), யோகேஸ்வரன் (வவா), திருச்செல்வம் (ராசா), ஜெகதீஸ்வரன் (சந்திரன்), காலஞ்சென்ற புவனேஸ்வரன் (ரவி), சுதந்திரேஸ்வரன் (செல்வன்), ரேவதி (கீதா - ஆசிரியை) ஆகியோரின் தாயாரும், கிருஷ்ணானந்தா, குகேந்திரன், சுபாசினி, கமலராணி, சிவசக்தி, சுகுமாரி, காந்திமதி, சிவசிதம்பரம் (ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும், ஜெனன், சிவானி, லக்சிதன், மணிவண்ணன், கிருத்திகன், யானுதி, ஜனதன், ஜதுசன், ஜனுசா, ஜனார்த், ஜெரூசா, கஜன், கஜனி, கிருஷ்த்திகா, கிருஷாந், ஆரபி, மகிழ்னன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2008) புதன் கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
திருச்செல்வம் (மகன்),
பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org